Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

தமிழ்Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, AUGUST 17, 2022

புதன்கிழமை, 17 ஓகஸ்ட் 2022 | ஒளி: 08 கதிர் 077 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# நெருக்கடி கூடும்




உலகின் மிக மோசமான உணவு பஞ்சத்தை எதிர்கொள்ளும் முதல் பத்து நாடுகளில் இலங்கை ஐந்தாவது இடத்தில் உள்ளது என உலக வங்கி அடையாளப்படுத்தியுள்ளது.
இந்த ஆண்டு செப்டெம்பர் மாதமளவில், உணவு விலை, பணவீக்கம் இலங்கையில் 80 சதவீதத்தை எட்டும் எனவும் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘யுவான் வாங் 5” பாதுகாப்பு அச்சுறுத்தலா?

# இந்திய நண்பனிடம் கேளுங்கள்



‘யுவான் வாங் 5” கப்பல் இலங்கைக்கான விஜயத்தை மேற்கொண்ட வேளையில் பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள நேர்ந்தது. ஆனால் இறுதியாக வெற்றிகரமாக எமது பயணத்தை முன்னெடுத்துள்ளோம். சீனா ஆராய்ச்சி கப்பல் ஹம்பாந்தோட்டை விஜயம் மிகவும் இயல்பானது சாதாரணமானது, கப்பலின் வருகை குறித்து இந்தியா பாதுகாப்பு கரிசனைகளை வெளியிட்டுள்ள நிலையில், அதற்கான காரணத்தினை இந்திய நண்பர்களிடம் கேட்கவேண்டும் என இலங்கைக்கான சீன தூதுவர் குய் சென்ஹொங் தெரிவித்துள்ளார்.

ஹம்பாந்தோட்டை துறைமுகமானது இலங்கை மற்றும் சீனாவின் "பெல்ட் அண்ட் ரோட்" திட்டத்தின் பிரதான மையமாகும். இது இலங்கை- சீன நட்புறவின் அடையாளமாகவும் உள்ளது. அத்துடன் இலங்கையின்



சுய அபிவிருத்தியில் வருமானத்தை ஈட்டித்தருவதில் முக்கியமான அமைவிடமாகவும் உள்ளது என்றார்.

மேலும், சீனாவும் இலங்கையும் நீண்ட கால நட்புறவை கொண்டுள்ள நாடுகளாகும். அதேபோல் சீன ஆராய்ச்சி கப்பலின் ஹம்பாந்தோட்டை விஜயம் மிகவும் இயல்பானது.

தொடர்ச்சி P2

## 6 நாள் தாமதமான கப்பல் 7 நாள் நங்கூரமிட்டிருக்கும்

சீனாவின் அதிநவீன செயற்கைக்கோள் ஆய்வு கப்பல் ‘யுவான் வாங் 5’ ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நேற்று (16) காலை 7.30 மணியளவில் வந்தடைந்தது. கடந்த 11ஆம் திகதியன்று வருகைதரவிருந்த இந்தக் கப்பல், இராஜதந்திர சர்சைகளுக்குப் பின்னர் வருகை தந்தது. எதிர்வரும் 22ஆம் திகதியன்றே கப்பல் புறப்பட்டுச் செல்லும்

‘யுவான் வாங் 5’ கப்பலின் இலங்கை விஜயம் குறித்து பல்வேறு சர்ச்சைகள் சர்வதேச மட்டத்தில் எழுப்பப்பட்ட போதிலும் அடுத்த ஒருவார காலத்திற்கான தரிப்பிடமாக ‘யுவான் வாங் 5’ ஹம்பாந்தோட்டை துறைமுகத்தில் நங்கூரமிடப்பட்டிருக்கும்.

தொடர்ச்சி P2




## கோட்டாபய தாய்லாந்துக்கு பறந்த விமான கட்டணத்தை அரசாங்கமே செலுத்தியது

மஹேஸ்வரி விஜயனந்தன்

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, சிங்கப்பூரிலிருந்து தாய்லாந்துக்கு பயணமான பிரத்தியேக விமானத்துக்கான செலவை இலங்கை அரசாங்கமே செலுத்தியதாக தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, முன்னாள் ஜனாதிபதிகளுக்கான சிறப்பு சலுகைகளின் அடிப்படையிலேயே கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் இதற்கான ஏற்பாடு செய்யப்பட்டதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## யாழ். பல்கலைக்கழக மாணவிகளுக்கு மர்ம அழைப்பு
### நிர்வாகம் அசமந்தம்; பொலிஸில் முறைப்பாடு

எம்.றொசாந்த்



யாழ்ப்பாண பல்கலைக்கழக மாணவிகளின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு அழைப்பெடுக்கும் மர்ம நபர் ஆபாசமாக பேசுவதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## “ போராட்ட இடம்” இனி போராட்ட பூமியல்ல



அரசாங்கத்துக்கு எதிரான போராட்டக்களமாக நான்கு மாதங்களுக்கும் மேலாக ஆர்ப்பாட்டக்காரர்களால் பயன்படுத்தப்பட்டு வரும் காலி முகத்திடல் பகுதியில் இனிமேல், நகர அபிவிருத்தி அதிகார சபையின் அனுமதியுடன் மாத்திரமே பொது நிகழ்வுகளுக்கு பயன்படுத்த முடியும் என நகர அபிவிருத்தி அதிகார சபை அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## நாயை கொலை செய்தவர் பொலிஸில் சரண்

எம்.றொசாந்த்

புங்குடுதீவில் நாய் ஒன்றை கைக்கோடாரியால் கொடூரமாக வெட்டிக் கொலை செய்த சந்தேகநபர் தலைமறைவாகியிருந்த நிலையில், ஊர்காவற்துறை பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## அநீதி ஏற்படாத வகையில் பரீட்சைகள் நடத்தப்படும்

மஹேஸ்வரி விஜயனந்தன்

நாட்டில் ஏற்பட்டுள்ள கொவிட் தொற்று மற்றும் எரிபொருள் நெருக்கடி காரணமாக மாணவர்கள் அதிகளவான பாடசாலை நாட்களை இழந்துள்ளதாகத் தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவை பேச்சாளருமான பந்துல குணவர்தன, மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் எதிர்வரும் பரீட்சைகள் திட்டமிடப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## முதலீட்டுக்காக தடைகள் நீக்கப்படவில்லை

மஹேஸ்வரி விஜயனந்தன்

வெளிநாட்டு முதலீடுகளைப் பெறுவதற்காக மாத்திரமே 06 புலம்பெயர் தமிழ் அமைப்புக்கள் மீதான தடை நீக்கப்பட்டுள்ளதாக கூறப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## மீண்டும் தமிழில் தேசிய கீதம்

நாட்டின் பன்மைத்துவத்தினை வெளிப்படுத்தும் வகையில் அரசாங்கத்தின் ஒவ்வொரு செயற்பாடுகளும் அமைய வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா வலியுறுத்தியுள்ளார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில் இடம்பெற்ற வாராந்த அமைச்சரவை கூட்டத்தில் சுதந்திர

தொடர்ச்சி P2



## மத்திய வங்கியின் அறிவிப்பு

ஏற்றுமதியாளர்கள் தமது பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்கு அனுப்புவதை ஊக்குவிக்கும் நோக்குடன் 2022 ஒகஸ்ட் 12 அன்று அல்லது அதற்குப் பின்னர் கிடைக்கப்பெறுகின்ற பணிகள் ஏற்றுமதி கிடைப்பனவுகளை/ பெறுகைகளை மாற்றுவதற்கான கட்டாயத் தேவைப்பாட்டினை இலங்கை மத்திய வங்கி மீளப்பெற்றுள்ளது.

இலங்கைக்கு அவ்வாறு அனுப்பப்பட்ட தமது ஏற்றுமதிப் பெறுகைகளை பணிகள் ஏற்றுமதியாளர்கள் அனுமதிக்கப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தலாம்.

தொடர்ச்சி P2

## எரிபொருள் விலையில் மாற்றமில்லை

எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் எரிபொருள்களின் விலைகளில் எவ்விதமான மாற்றங்களும் ஏற்படாது என்றும் சகல எரிபொருள் வகைகளுக்குமான விலைகள் அவ்வாறே பேணப்படும் என்றும் எரிசக்தி அமைச்சின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எரிபொருள் விலை சூத்திரத்தின் பிரகாரம் ஒகஸ்ட் 15ஆம் திகதியன்று எரிபொருள் விலைகளில் திருத்தம் கொண்டுவரப்பட விருந்தது எனினும்,

தொடர்ச்சி P2

## எமக்கு பதவிகளை வழங்க அரசாங்கம் தயாராகிறது



பா.நிரோஸ்

பாராளுமன்றத்தில் உள்ள பிரதான குழுக்களின் தலைவர் பதவிகளை எதிர்க்கட்சி வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக எதிர்க்கட்சி தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளதோடு, அமைச்சுப் பதவிகளைப் பெறாது அரசாங்கத்தின் நல்ல வேலைத்திட்டங்களுக்கு எதிர்க்கட்சி ஒத்துழைப்புக்களை வழங்கும் எனவும் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## பல்கலைக்கழக மாஃபியா;
# உயிரை மாய்க்க முயன்ற மாணவன்

எம்.றொசாந்த்

பகடிவதையில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தற்காலிக வகுப்பத்தடை விதிக்கப்பட்டுள்ள மாணவர்களில் ஒருவர் தனது உயிரை மாய்க்க முயன்ற நிலையில், தெல்லிப்பளை ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கடந்த மாதம் யாழ்ப்பாண பல்கலைக்கழக புதுமுக மாணவர்களை தெல்லிப்பளை பகுதிக்கு அழைத்து பகடிவதை புரிந்தனர் என குற்றம் சாட்டப்பட்ட 18 மாணவர்களுக்கு தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## போர்ட் சிட்டியில் முதலீடு செய்யுங்கள்
### சீனாவின் ‘பெல்ட் அண்ட் ரோட்” நாட்டில் செழிப்பை ஏற்படுத்தியுள்ளது



சீனாவின் "பெல்ட் அண்ட் ரோட்" வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பானது, நாடுகளினது செழுமையை உருவாக்குவதோடு, வறுமையை ஒழிக்கும் மிகச்சிறந்த வேலைத்திட்டமாகும் என சீனாவுக்கான இலங்கை தூதுவர் பாலித கோஹன தெரிவித்துள்ளார். கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய சகல பகுதிகளில் இருந்தும் முதலீட்டாளர்களை அழைக்கிறோம் எனவும்

தொடர்ச்சி P2

## கைதியா? கலைப்பதா?
# ஜனாதிபதியே தீர்மானிக்க வேண்டும்

பா.நிரோஸ்

மொட்டுக் கட்சியினரின் சிறைக் கைதி போல செயற்படுவதா அல்லது , பாராளுமன்றத்தைக் கலைத்துவிட்டு பொதுத்தேர்தலுக்கு சென்று மக்கள் ஆணையை பெற்று, கொள்கைப் பிரகடன உரையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை நடைமுறைப்படுத்துவதா? இதில் எதை செய்வது என்பதை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தீர்மானிக்க



தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## மாணவிகளுக்கு...

மாணவிகளின் கையடக்கத் தொலைபேசிகளுக்கு இரவு வேளைகளில் அழைப்பெடுக்கும் நபர், ஆபாசமாக பேசி வந்துள்ளார்.

அவரின் தொலைபேசி இலக்கத்தில் இருந்து அழைப்பு வராதவாறு தடுத்தாலும் (ப்ளக்) வேறு இலக்கங்களில் இருந்து அழைப்பெடுத்து மாணவிகளை இம்சைக்கு உள்ளாக்கி, உளவியல் ரீதியாக பாதிக்கும் வகையில் செயற்பட்டுள்ளார்.

இது தொடர்பில் மாணவிகளால் பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவித்த போதிலும், நிர்வாகம் உரிய முறையில் நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்த பாதிக்கப்பட்ட மாணவிகள், தமக்கு தொலைபேசியில் தொல்லை தரும் மர்ம நபர் தொடர்பில் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளனர்.

முறைப்பாட்டில் குறித்த நபரின் தொலைபேசி இலக்கங்களையும் மாணவிகள் வழங்கியுள்ளனர்.

## “ போராட்ட இடம்”...

இதன்படி, முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவினால் மக்கள் போராட்டங்களுக்காக அறிவிக்கப்பட்ட ‘போராட்ட இடம்’ இனி இருக்காது எனவும் சபை அறிவித்துள்ளது.

அந்தப் பகுதியில் இனிமேலும் போராட்டங்களை நடத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை என நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

அதேபோல் இந்த பூமியானது நகர அபிவிருத்தி அதிகார சபைக்கும் அரசாங்கத்துக்கும் சொந்தமானது. இந்தப் பகுதியில் புல் நடுகை செய்திருந்தோம். ஆனால் இப்போது இந்த பகுதி மறுசீரமைக்கப்பட வேண்டும். அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். அதுமட்டுமல்ல இந்த காணியை எந்தவொரு தரப்பினருக்கும் குத்தகைக்கு வழங்கவோ அல்லது முதலீட்டுக்கு ஒதுக்கவோ திட்டம் இல்லை எனவும் பணிப்பாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.

## நாயை கொலை...

இவர் பொலிஸாரால் ஊர்காவற்றுறை நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு , எதிர்வரும் 29ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் நாய் ஒன்றை கைக்கோடாரியால் வெட்டி கொடூரமாகக் கொலை செய்யும் காட்சி, சமூக ஊடகங்களில் வெளியாகியது.

அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், புங்குடுதீவு 9ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த 21 மற்றும் 35 வயதுடைய இருவரை கைது செய்தனர்.

நாயை வெட்டிக் கொல்லப் பயன்படுத்தி கைக்கோடாரி மற்றும் அதனை காணொளி எடுத்த கையடக்கத் தொலைபேசி என்பனவும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

“போதைப்பொருளுக்கு அடிமையாகியதால் ஊரில் திருட்டுகளில் ஈடுபட்டோம். எம்மைக் கண்டவுடன் நாய் குலைத்து காட்டிக்கொடுத்துவிடும். இதனால் அங்கு இடம்பெறும் திருட்டுகளுடன் எமக்குத் தொடர்பு உண்டு எனப் பொலிஸார் விசாரணைக்கு அழைப்பார்கள். அதனால்தான் அந்த நாயைக் கொலை செய்தோம்”என்று கூறியுள்ளனர்.

## உயிரை மாய்க்க...

பகடிவதை சம்பவம் தொடர்பில் விசாரணைகளை பல்கலைக்கழக நிர்வாகம் முன்னெடுத்து வரும் நிலையில், விசாரணைக்கு ஏதுவாக 18 மாணவர்களுக்கும் தற்காலிக வகுப்புத்தடை விதிக்கப்பட்டது.

அந்நிலையில், விரிவுரையாளர் ஒருவர் தனது விரிவுரையில், வகுப்புத்தடை விதிக்கப்பட்ட மாணவர்களின் புகைப்படங்களை காண்பித்து “இவர்கள் தான் பல்கலைக்கழக மாஃபியாக்கள்” எனக் கூறி 18 மாணவர்கள் தொடர்பிலும் தவறான தகவல்களை மாணவர்கள் மத்தியில் கூறியுள்ளார். இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்களால், பல்கலைக்கழக நிர்வாகத்துக்கு அறிவிக்கப்பட்டது. நிர்வாகம் அது தொடர்பில் கரிசனை கொள்ளவில்லை என மாணவர்கள் தெரிவித்தனர்.

அந்நிலையில், தமது புகைப்படங்களை காண்பித்து மாணவர்கள் மத்தியில் தவறான தகவல்களை பரப்பியமை தொடர்பில் மனிதவுரிமை ஆணைக்குழுவின் யாழ். பிராந்திய அலுவலகத்திலும் முறைப்பாடு செய்யப்பட்டது. குறித்த முறைப்பாடு குறித்து யாழ். பல்கலைக்கழக துணைவேந்தருக்கு தெரியப்படுத்தப்பட்டுள்ளது.

## விமான கட்டணத்தை...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார். இலங்கையில் ஜனாதிபதி ஒருவருக்கான சிறப்பு சலுகைகளின் கீழ், முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் தற்போதைய ஜனாதிபதிக்கும் கிடைக்க வேண்டிய சிறப்பு சலுகைகள் தொடர்பில் சட்ட ஏற்பாடுகள் உள்ளன. இதற்கமைய முன்னாள் ஜனாதிபதிகளின் மனைவியரும் இந்த வரப்பிரசாதங்களை பெற உரித்துடையவர்கள். அந்த வகையில் முன்னாள் ஜனாதிபதி ஒருவர் உயிரிழந்த பின்னர் அவரது மனைவிக்கு இவ்வாறான பாதுகாப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டிய கடப்பாடு எமக்கு உள்ளது. இதற்கமைய, மறைந்த முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் மனைவி ஹேமா பிரேமதாசவுக்கும் சிறப்பு சலுகைகள் வழங்கப்பட்டுள்ளதாகவே தான் அறிகின்றேன் என்றார்.

## நெருக்கடி கூடும்

தெற்காசிய வலயத்தில் இலங்கை மிகப்பெரிய உணவு பற்றாக்குறையை எதிர்கொண்டுள்ளது. இலங்கையில் விவசாய உற்பத்தி 40 சதவீதம் முதல் 50 சதவீதம் வரை குறைவடைந்துள்ளது. குறிப்பாக உரத் தட்டுப்பாடு, உணவு இறக்குமதியை வாங்குவதற்கு அன்னியச் செலாவணி பற்றாக்குறை போன்ற காரணிகள் இதில் தாக்கத்தை செலுத்தியுள்ளதாகவும், உரம் மற்றும் எரிபொருள் பற்றாக்குறை உணவு விநியோகத்தை மேலும் குறைக்கும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் உலக வாங்கி சுட்டிக்காட்டியுள்ளது.மேலும், இந்த நெருக்கடியை சமாளிக்க இந்தியா வழங்கியுள்ள உதவிகள் இலங்கைக்கு ஓரளவு நிம்மதியை வழங்கியுள்ளதாகவும், எனினும் எதிர்காலத்தில் இலங்கைக்கு நெருக்கடிகள் ஏற்படும் எனவும் சுட்டிக்காட்டியுள்ளனர். இந்த ஆண்டு செப்டெம்பர் மாதமளவில், உணவு விலை பணவீக்கம் இலங்கையில் 80 சதவீதத்தை எட்டும் எனவும் தெரிவித்துள்ளது.

# இந்திய நண்பனிடம்...

இதில் விசேடமாக எதுவுமில்லை என்பது சகலருக்கும் தெரியும். இவ்வாறான கப்பல் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது இது முதல் தடவையுமல்ல,2014 இல் இவ்வாறானதொரு சீன கப்பல் கொழும்புக்கு விஜயம் மேற்கொண்டது. ஆகவே இது இயல்பான விடயம்,எனவே, இந்த விஜயத்தின் நோக்கம் குறித்து இலங்கை மக்களுற்கும் முழு உலகுக்கும் எமது ஊடக நண்பர்கள் தெரிவிக்கவேண்டும்.

கப்பலின் வருகை குறித்து இந்தியா பாதுகாப்பு கரிசனைகளை வெளியிட்டுள்ள நிலையில், அதற்கான காரணத்தினை இந்திய நண்பர்களிடம் கேட்கவேண்டும் என நான் கருதுகின்றேன். இந்த விஞ்ஞான ஆராய்ச்சி கப்பல் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை வெற்றிகரமாகவும் அமைதியாகவும் வந்தடைந்துள்ளது. இது எங்கள் இரு நாடுகளுக்கு இடையில் வழமையான பரிமாற்றங்கள் என நான் கருதுகின்றேன் என்றார்.

### 6 நாள் தாமதமான கப்பல் 7 நாள் நங்கூரமிட்டிருக்கும்

222 மீட்டர் நீளமும், 26 மீட்டர் அகலமும் கொண்ட இந்த உளவு கப்பல் 11 ஆயிரம் தொன் எடையை கொண்ட பொருட்களை சுமக்கும் வல்லமை கொண்டது. கடல் சார் கண்காணிப்பு, செயற்கை கோள் தொழில்நுட்பத்தை கொண்டதுடன் 750 கி.மீ. சுற்றளவுக்கு இருக்கும் ஒவ்வொன்றையும் துல்லியமாக ஆய்வு செய்யும் வசதிகள் ‘யுவான் வாங் 5’ கப்பலுக்கு உள்ளது.

நேற்று காலை ஹம்பாந்தோட்டை துறைமுகத்திற்கு வருகைதந்த ‘யுவான் வாங் 5’கப்பலை இலங்கையின் சார்பில் ஜனாதிபதியின் பிரதிநிதியாக முன்னாள் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர வரவேற்றிருந்ததுடன், சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர்களாக விமல் வீரவன்ச, வாசுதேவ நாணயக்கார, அத்துரலியே ரத்தன தேரர், திஸ்ஸ விதாரண, மொஹம்மட் முஸம்மில் உள்ளிட்டவர்களும் ஸ்ரீ லங்கா பொதுஜன முன்னணியின் ஒரு சில உறுப்பினர்களும் இந்த நிகழ்வில் கலந்துகொள்ளண்டிருந்தனர். சீனாவின் சார்பில் இலங்கைக்கான சீன தூதுவர் உள்ளிட்ட இராஜதந்திர அதிகாரிகள் பலரும் நிகழ்வில் கலந்துகொண்டிருந்தனர்.

## அநீதி ஏற்படாத...

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

குறித்த பிரச்சினைகள் காரணமாக, முதலாம் தரம் மற்றும் ஆரம்ப தரங்களுக்கு பிரவேசித்த சிறார்களுக்கு பாரிய அநீதி இழைக்கப்பட்டதாகவும், அதிகாரிகள் மற்றும் கல்வி நிபுணர்கள் பல்வேறு பட்டறைகளை நடாத்தி இது தொடர்பில் கவனம் செலுத்தவுள்ளதாகவும் இதற்கமையவே, மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் எதிர்வரும் பரீட்சைகள் திட்டமிடப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.

மேலும் அசாதாரண எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் பாடசாலை வேன் கட்டண அதிகரிப்பு காரணமாக பொது போக்குவரத்துக்கு பாடசாலை பஸ்களின் எண்ணிக்கையை அதிகரிக்குமாறு பெருமளவான கோரிக்கைகள் வந்துள்ளதாகவும், அதன்படி பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்வதற்காக பாடசாலை பஸ்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்த அமைச்சர், போக்குவரத்து ஆணைக்குழுவினால் அமல்படுத்தப்படும் நிவாரணத் திட்டத்தின் கீழ் இயங்கும் மாணவர்களுக்கான பஸ்கள் தொடர்ந்தும் இயங்கும் எனவும் கூறினார்.

மேலும் 80 பாடசாலை பஸ்களை இலங்கைக்கு கொண்டுவர திட்டமிடப்பட்டுள்ளதாகவும், முன்னோடி திட்டமாக இந்த பாடசாலை பஸ்களை கொழும்பு நகருக்குள் செயற்படுத்த தீர்மானித்துள்ளதாகவும் தெரிவித்தார்.எனினும், இந்த திட்டத்தை செயல்படுத்த தொழில்நுட்ப குழுவின் பரிந்துரை இன்னும் கிடைக்கவில்லை என்றும் குறித்த தாமதத்துக்கான காரணம் தொடர்பில் தான் ஆராய்வதாகவும் தெரிவித்தார்.

## முதலீட்டுக்காக தடைகள்...

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (16) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். 1968 ஆம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையின் 45 ஆம் இலக்க சட்டத்தின் விதிகளின் படி, பாதுகாப்பு அமைச்சானது பயங்கரவாத மற்றும் பயங்கரவாத அமைப்புகளின் தடை தொடர்பில் தீர்மானம் எடுக்கும் எனவும் தெரிவித்த அவர், இது தொடர்பான விசேட வர்த்தமானி அறிவித்தலை இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு வெளியிட்டுள்ளது என்றார். . இதற்கமைய, கடந்த காலத்தில் தடை செய்யப்பட்ட 06 சர்வதேச தமிழ் அமைப்புகளான அவுஸ்திரேலிய தமிழர் பேரவை, உலகத் தமிழர் பேரவை, உலக திராவிட ஒருங்கிணைப்புக் குழு, திராவிட ஈழ ஜனதா ஆகிய அமைப்புகளின் கறுப்புப்பட்டியல் தடையை நீக்க பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளதாக அமைச்சர் தெரிவித்தார். ஐ. நா பாதுகாப்பு பேரவை மாநாட்டின் 1373ன் கீழ், கனேடிய தமிழர் பேரவை மற்றும் பிரித்தானிய தமிழர் பேரவை போன்ற அமைப்புகள் மீதான தடை நீக்கப்பட்டதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

கடந்த காலங்களில் இந்த அமைப்புகளின் செயற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் பரிந்துரைகளுக்கு அமைய தடை நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர், சர்வதேச சாசனங்கள் மற்றும் அங்கீகாரங்களின் படி ஐக்கிய நாடுகளின் கொள்கைகளுக்கு மதிப்பளிப்பதற்காகவும் தொடர்ச்சியான விசாரணைகளின் பின்னரும் இத்தடைகள் நீக்கப்பட்டது என்றார். அதேபோல் 3 புதிய அமைப்புகள், கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவை தொடர்பிலும் அரச வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றார்.

## மீண்டும் தமிழில்...

தின ஏற்பாடுகள் தொடர்பாக பிரஸ்தாபிக்கப்பட்ட நிலையிலேயே குறித்த விடயம் வலியுறுத்தப்பட்டது. மேலும் குறித்த கலந்துரையாடலில், நல்லாட்சி என்று சொல்லப்பட்ட அரசாங்கத்தின் காலத்தில் தற்போதைய ஜனாதிபதியின் நல்லெண்ண வெளிப்பாடாக சுதந்திர தினத்தில் தேசிய கீதம் தமிழிலும் பாடப்பட்டமையை சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்காலத்திலும் அந்த நடைமுறையை பின்பற்ற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார். கடற்றொழில் அமைச்சரின் குறித்த வேண்டுகோள் அமைச்சரவையினால் ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதனைத் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, பன்மைத்துவம் சமத்துவம், சம உரிமை போன்றவை கடந்த காலங்களில் கொள்கையளவில் மாத்திரம் இருந்தமையும் நாடு பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்வதற்கு காரணமாக இருந்தது என்பதை சுட்டிக்காட்டியதுடன், எதிர்காலத்தில் இந்த நாட்டில் வாழ்கின்ற அனைத்து மக்களும் மனப்பூர்வமாக உணர்ந்து கொள்ளும் வகையில் கொள்கை ரீதியான தீர்மானங்கள் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## மத்திய வங்கியின் அறிவிப்பு

பணிகள் வழங்கும் திகதியிலிருந்து 180 நாட்களுக்குள் பணிகள் ஏற்றுமதிப் பெறுகைகளை நாட்டிற்குப் பெற்றுக்கொள்வதற்கான கட்டாயத் தேவைப்பாடு மாற்றமின்றிக் காணப்படும் எனவும் மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

2022இன் முதல் ஆறு மாதகாலப்பகுதியில் மொத்தமாக ஐ.அ.டொலர் 1,533 மில்லியன் கொண்ட தொகை பணிகள் ஏற்றுமதிக் கிடைப்பனவுகளாகக் கிடைக்கப்பெற்றுள்ளன. இதில் ஐ.அ.டொலர் 406 மில்லியன் இலங்கை ரூபாய்களாக மாற்றப்பட்டுள்ளது. ஐ.அ.டொலர் 324 மில்லியன் கொண்ட அதிகூடிய மாதாந்த பணி ஏற்றுமதிப் பெறுகைகள் 2022 மாச்சில் கிடைக்கப்பெற்றன. பணிகள் ஏற்றுமதியாளர்களின் பிரதிநிதிகளுடனான கலந்துரையாடல்களின் போது ஏற்றுமதிப் பெறுகைகளை மேலும் அதிகரிப்பதற்கான வாய்ப்புக்களை அவர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர்.

## எரிபொருள் விலையில்...

திருத்தங்கள் மேற்கொள்ளப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

ஒக்டேன் 92 பெட்ரோல் லீற்றர் 450 ரூபாய், ஒக்டேன் 95 பெட்ரோல் லீற்றர் 540 ரூபாய், ஒட்டோ டீசல் லீற்றர் ஒன்றின் விலை 430 ரூபாய் சுப்பர் டீசலின் விலை 510 ரூபாய் என்ற அடிப்படையில் , விலைகள் தொடர்ந்து பேணப்படும்.

## ஜனாதிபதியே...

வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

சர்வகட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் என்ன என்பது தொடர்பில் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. ஆனால் யாருக்கு என்ன அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்பது தொடர்பிலேயே பேசி வருகிறார்கள். அமைச்சுப் பதவிகளை விட வேலைத்திட்டங்களே முக்கியம் எனவும் தெரிவித்தார்.

22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களில் கலைக்கலாம் என்பதை மாற்ற வேண்டும் என மொட்டுக் கட்சியினர் கோரிக்கை விடுத்து வருவதாகவும், இதன் பின்னனியில் பசில் ராஜபக்ஷவே இருக்கிறார் எனவும் கூறிய அவர், பாராளுமன்றம் மீதான மக்கள் ஆணை திரிபடைந்துள்ளது என்றார்.

## போர்ட் சிட்டியில் முதலீடு செய்யுங்கள்

சீனாவின், சியானில் நடைபெற்ற சர்வதேச ஒத்துழைப்புக்கான ஆறாவது பட்டுப்பாதை மாநாட்டில் உரையாற்றிய போதே தூதுவர் பாலித கோஹன இதனை தெரிவித்துள்ளார்.

சீன ஜனாதிபதி ஜி ஜின் பிங்கின் "பெல்ட் அண்ட் ரோட்" முயற்சியின் கீழ் சாதகமான பெறுபேறுகள் கிடைத்துள்ளன என்பதை மறுக்க முடியாது. இதனால் வருமானம் ஈட்டும் துறைகளில் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது எனக் குறிப்பிட்ட அவர், “பெல்ட் அண்ட் ரோட்" வேலைத்திட்டத்தின் எதிர்பார்ப்பானது, நாடுகளினது செழுமையை உருவாக்குவதாகும். குறிப்பாக வறுமையை ஒழிக்கும் மிகச்சிறந்த வேலைத்திட்டமாகும் எனவும் தெரிவித்துள்ளார்.

இந்த வேலைத்திட்டத்தில் இலங்கையை பொறுத்தவரையில் , கடலில் இருந்து ஒரு பரந்த பகுதியை மீட்டெடுத்து, கொழும்பு துறைமுக நகரம் என்று அழைக்கப்படும் புதிய நகரத்தை கட்டியெழுப்பியுள்ளது. கொழும்பு துறைமுக நகரத்தில் முதலீடு செய்ய சகல பகுதிகளில் இருந்தும் முதலீட்டாளர்களை அழைக்கிறோம். இந்த நகரானது இந்தியப் பெருங்கடலின் நடுவில் உள்ள விலைமதிப்பற்ற இடமாகும் . இதனை மதிப்பில் ஒப்பிட முடியாது. அதேபோல் தெற்கு - ஹம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள புதிய துறைமுகமானது கிழக்கு மேற்கு கப்பல் பாதையில் சேவையாற்றுவதற்காக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் வருடாந்தம் 36,000 கப்பல்கள் பயணிக்கின்றன. இத் திட்டமானது, நாட்டில் ஒரு வித்தியாசத்தை ஏற்படுத்தும்.

## எமக்கு பதவிகளை...

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே சஜித் பிரேமதாஸ மேற்கண்டவாறு தெரிவித்தார். ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய மக்கள் கூட்டமைப்பும் நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான அரசாங்கத்தின் வேலைத்திட்டங்களுக்கு முழுமையாக ஒத்துழைப்புக்களை வழங்க வேண்டும் என்ற உறுதியான நிலைப்பாட்டிலேயே இருக்கிறோம் . ஆனால் அமைச்சு பதவிகள் என்கிற எலும்புத் துண்டு களை சுவைத்து நாட்டு மக்களுக்கு மேலும் சுமையை அதிகரிப்பதை நாம் முழுமையாக எதிர்க்கிறோம் எனவும், நாட்டு மக்களின் குரல்கள் எமக்குக் கேட்கும். அவர்கள் மனதில் என்ன இருக்கிறது என்பது எமக்கு தெரியும் எனவும் தெரிவித்தார்.

## ஜனாதிபதியே...

வேண்டும் என எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று (16) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனை தெரிவித்தார். சர்வகட்சி அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்கள் என்ன என்பது தொடர்பில் இதுவரையில் அறிவிக்கப்படவில்லை. ஆனால் யாருக்கு என்ன அமைச்சுப் பதவி வழங்க வேண்டும் என்பது தொடர்பிலேயே பேசி வருகிறார்கள். அமைச்சுப் பதவிகளை விட வேலைத்திட்டங்களே முக்கியம் எனவும் தெரிவித்தார்.

22ஆவது திருத்தச் சட்டமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ள, பாராளுமன்றத்தை இரண்டரை வருடங்களில் கலைக்கலாம் என்பதை மாற்ற வேண்டும் என மொட்டுக் கட்சியினர் கோரிக்கை விடுத்து வருவதாகவும், இதன் பின்னனியில் பசில் ராஜபக்ஷவே இருக்கிறார் எனவும் கூறிய அவர், பாராளுமன்றம் மீதான மக்கள் ஆணை திரிபடைந்துள்ளது. எனவே, பொதுத் தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும் என்றார்.

மொட்டுக் கட்சியினரோடு ஜனாதிபதியால் தொடர்ந்தும் செயற்பட முடியாது. மொட்டுக் கட்சியினரின் நிலைப்பாட்டுக்கு எதிராக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயற்படுவாராக இருந்தால் உடனடியாக பாராளுமன்றத்தைக் கலைத்து விட்டு தேர்தல் ஒன்றுக்கு செல்ல வேண்டும். இல்லை என்றால் மொட்டுக் கட்சியினரின் சிறைக் கைதியாகவே ரணிலால் செயற்பட முடியும் என்றார்.






# ஐந்து அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து முல்லை மீனவர்கள் ஆர்ப்பாட்டப் பேரணி

விஜயரத்தினம் சரவணன்

மானிய விலையில் மீனவர்களுக்கான மண்ணெண்ணெய் மற்றும்,படகுவெளியிணைப்பு இயந்திரத்திற்கான ஒயில் வழங்குதல், தடையின்றி மீனவர்களுக்கான எரிபொருள் வழங்குதல், இந்திய இழுவைப்படகின் வருகையைக் கட்டுப்படுத்தல், கடந்த மூன்று மாதங்களாக தொழிலின்றிப் பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான நஷ்டஈடு வழங்குதல், சட்டவிரோத மீன்பிடித் தொழிலைத் தடைசெய்தல் போன்ற ஐந்து அம்ச கோரிக்கைகள் முன்வைத்து, முல்லைத்தீவு மீனவர்கள் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணியில் நேற்று (16) ஈடுபட்டனர்.

# நியாயமற்ற தடையை நீக்கலாம்

பா.நிரோஸ்

நியாயமற்ற முறையில் புலம்பெயர் தமிழ் அமைப்புகள் மீது தடை விதிக்கப்பட்டிருந்தால் அவற்றை நீக்க வேண்டும் என சுயாதீன பாராளுமன்ற உறுப்பினர் விமல் வீரவன்ச தெரிவித்தார்.



சுதந்திரத்துக்குப் பின்னர் பாரிய பொருளாதார நெருக்கடி நிலைமைகளுக்கு தற்போது நாம் முகங்கொடுத்து வருகிறோம். இதற்கு நாம் அனைவருமே பொறுப்புக்கூற வேண்டும் எனவும் தெரிவித்துள்ளார்.

புலம்பெயர் தமிழ் அமைப்புகள் கடந்த காலங்களில் கொண்டிருந்த கொள்கைகளில் மாற்றங்கள் ஏற்பட்டிருந்தால், அவர்கள் நாட்டுக்கு டொலர்களைக் கொண்டுவந்தாலும் வராவிட்டாலும் அந்த அமைப்புகள் மீது அசாதாரண முறையில் தடை விதிக்கப்பட்டிருந்தால் அவற்றை நீக்குவதில் பிரச்சினை இல்லை என்றார்.

எனவே, டொலரையும் புலம்பெயர் அமைப்புகள் மீதான தடை நீக்கத்தையும் முடிச்சுப் போட முடியாது. அவ்வாறு செய்யும் பட்சத்தில் தேசிய பாதுகாப்பை விட டொலரே முக்கியமான ஒன்றாக தோன்றும் எனவும் தெரிவித்தார்.

## போலி நாணயத்தாள், ஹெரோய்னுடன் ஒருவர் கைது

பாறுக் ஷிஹான்

போலி நாணயத்தாள்கள் மற்றும் ஹெரோய்ன் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் நபரொருவரை, கல்முனை விசேட அதிரடிப்படையினர் கைது செய்துள்ளனர்.

அம்பாறை - கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலையடுத்து, விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் கல்முனை காஸீம் வீதியில் வைத்து நேற்று (16) அதிகாலை சந்தேகநபர் கைதானார்.

இவ்வாறு கைதான நபர் 39 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன், சந்தேகநபர் வசம் இருந்து போலி 5,000 ரூபாய் தாள்கள் 03 மற்றும் 3 கிராம் 100 மில்லிகிராம் ஹெரோய்ன் போதைப்பொருள் என்பன விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேகநபரை, நீதிமன்ற நடவடிக்கைக்காக சான்று பொருட்களுடன் கல்முனை பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் பாரப்படுத்தியுள்ளனர்.



## ஒலுவில் துறைமுகம் மூடப்பட வேண்டும்

### அஷ்ரபின் பெயர் சூட்டல் சூழ்ச்சியே

அஸ்லம் எஸ்.மௌலானா

“ஒலுவில் துறைமுகத்துக்கு எம்.எச்.எம்.அஷ்ரப்பின் பெயர் சூட்டப்பட்டிருப்பதானது ஒரு சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது. கல்முனைப் பிராந்தியத்தில் கடலரிப்பு ஏற்படுவதற்கும் கடற்றொழில் பாதிப்படைவதற்கும் முக்கிய காரணமாக அமைந்திருக்கின்ற இத்துறைமுகம் உடனடியாக இழுத்து மூடப்பட வேண்டும்” என கிழக்கிழங்கை முஸ்லிம் முன்னணி கோரிக்கை விடுத்துள்ளது.

இக்கோரிக்கையை வலியுறுத்தி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, துறைமுக அபிவிருத்தி அமைச்சர் நிமல் சிறிபால டி.சில்வா மற்றும் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா உள்ளிட்டோருக்கு நேற்று (16) மகஜர் அனுப்பி வைக்கப்பட்டிருப்பதாக அமைப்பின் செயலாளர் செயிட் ஆஷிப் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்; “மறைந்த ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் எம்.எச்.எம்.அஷ்ரப், நாட்டினதும் பிராந்தியத்தினதும் பொருளாதார அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு ஒலுவில் துறைமுக நிர்மாணத் திட்டத்தை முன்மொழிந்திருந்தார்.

“எனினும், குறித்த கடற்பரப்பு துறைமுக அமைப்புக்கு பொருத்தமற்றது எனவும் இதனால் மீனவர் சமூகத்தினருக்கு பெரும் பாதிப்பு ஏற்படக்கூடிய வாய்ப்புள்ளது எனவும் நிபுணத்துவ ஆய்வறிக்கை வெளிப்படுத்தியிருந்தது.

“அவை எதுவும் கருத்தில் கொள்ளப்படாமலேயே துறைமுக நிர்மாண வேலைகள் முன்னெடுக்கப்பட்டிருந்தன. இதற்காக ஒலுவில் கிராமத்தில் நூற்றுக்கணக்கானோரின் குடியிருப்புக் காணிகள் சுவீகரிக்கப்பட்டிருந்தன.

“இத்துறைமுக நிர்மாணத்தால் நாட்டுக்கோ பிராந்தியத்துக்கோ இதுவரை எவ்விதப் பயனும் கிடைக்கவில்லை. மாறாக தொடர்ந்தும் இழப்புகளையே சந்திக்க நேரிட்டுள்ளது. இதற்காக ஒரு கிராமம் காவு கொடுக்கப்பட்டிருக்கிறது.

“மக்கள் தமது காணிகளையும் வாழ்வாதாரத்தையும் இழந்து, நிர்க்கதியடைந்திருப்பதுடன் பாரிய கடலரிப்புக்கும் வழிவகுத்திருக்கிறது.

“கடற்றொழில் அமைச்சரான டக்ளஸ் தேவானந்தா அண்மையில் இங்கு விஜயம் செய்து, இத்துறைமுகத்துக்கு அஷ்ரப் ஞாபகார்த்த மீன்பிடித் துறைமுகம் என்று பெயர் சூட்டி விட்டுச் சென்றுள்ளார்.

“இத்துறைமுகத்துக்கு மறைந்த தலைவரான அஷ்ரபின் பெயரை சூட்டி விட்டால் பிரச்சினைகள் எல்லாம் தாமாக தீர்ந்து விடுமா? இது மக்களை ஆசுவாசப்படுத்தி, திசைதிருப்பும் சூழ்ச்சியாகவே நோக்கப்படுகிறது.

“இவ்வாறான மாயைகளை விடுத்து, மக்களின் பிரச்சினைகளை உள்வாங்கி தூரநோக்குடன், ஆக்கபூர்வமாக சிந்தித்து, செயற்பட அரசாங்கமும் சம்மந்தப்பட்ட அமைச்சர்களும் அவசரமாக முன்வர வேண்டும்” என்றார்.

## கட்டார் நிதியத்தின் தடையையும் நீக்க வேண்டும்



பா.நிரோஸ்

தடை செய்யப்பட்ட புலம்பெயர் அமைப்புகள் மீது எவ்வாறு தற்போது தடை நீக்கப்பட்டுள்ளதோ அதேபோல், கட்டார் நிதியத்தின் மீது விதிக்கப்பட்டுள்ள தடையையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நீக்க வேண்டும் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபூர் ரஹ்மான் தெரிவித்தார்.

போலியான குற்றச்சாட்டுகளாலேயே இந்த நிதியம் மீது தடை விதிக்கப்பட்டுள்ளது. நாட்டின் பிள்ளைகளுக்கான உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த மாதம் ஒன்றுக்கு 2 மில்லியன் டொலர்களை அந்நிதியம் செலவிட்டு வந்தது எனவும் தெரிவித்தார். முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ சிலரது பேச்சைக் கேட்டு அந்நிதியம் மீது தடையை விதித்திருந்தார். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது இந்நிதியம் மீதான தடையை நீக்குவதாக கட்டார் தூதுவருக்கு உறுதியளித்திருந்தார் எனவும் தெரிவித்தார்.



## தூதுவராக நியமனம்

இந்தோனேசியாவுக்கான இலங்கையின் புதிய தூதுவராக முன்னாள் கடற்படைத் தளபதியும் வெளிவிவகார அமைச்சின் செயலாளருமான அட்மிரல் ஜயநாத் கொலம்பகே நியமிக்கப்பட்டுள்ளார்.

## ஊழல்வாதிகளை அமைச்சர்களாக்க வேண்டாம்

காலிமுகத்திடல் போராட்டம் காரணமாகவே ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக நியமிக்கப்பட்டார். எனினும் பதவியை பெற்ற அவர் கடந்த காலத்திலிருந்து எதையும் கற்றுக் கொள்ளவில்லை என்று தெரிகிறது என ஓமல்பே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.



தேசிய சொத்துக்களை அபகரித்தவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்பட வேண்டும் எனவும், ஊழல்வாதிகளை அமைச்சர்களாக நியமிக்கக் கூடாது எனவும் வலியுறுத்தியுள்ளார்.

புதிய நடைமுறைகளுக்குப் பதிலாக, ஜனாதிபதி பழைய நடைமுறைகளையே தொடர்கிறார். அவர் தனது பழைய அமைச்சர்கள், நண்பர்கள் மற்றும் உறவினர்களின் ஆதரவுடன், சுயநலம் மற்றும் மனிதாபிமானமற்ற அரசியல் நிகழ்ச்சி நிரலை முன்னெடுப்பதாக தெரிகின்றது.

எனவே, பழைய நடைமுறைகளை கைவிட்டு, திருடர்களை தண்டித்து, நாட்டின் தேசிய வளங்களை திருடர்களிடம் இருந்து மீட்க வேண்டும் எனவும் தேரர் தெரிவித்துள்ளார்.

மக்களின் எதிர்பார்ப்பானது இன்னமும் நிறைவேற்றப்படவில்லை. நாடு முன்னேற்றம் அடைவதுடன், ஊழல் அரசியல் செயற்பாடுகள் நிறுத்தப்பட வேண்டும். அத்துடன் சர்வதேச நாடுகளுடனான முரண்பாடுகளை தவிர்த்துக்கொள்ள வேண்டும். இலங்கையின் நிலை என்ன என்பதை உணர்ந்து தலைவர்கள் செயற்பட வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## பீல்ட் மார்ஷலை பறித்தால் மார்ஷல் ஒப் ஸ்ரீலங்காவாக வருவேன்

எனக்கு வழங்கப்பட்டுள்ள பீலட் மார்ஷல் பதவியை தற்போதைய அரசாங்கத்தில் உள்ளவர்கள் பறிக்க நினைத்தால், பீல்ட் மார்ஷல் பதவியை விடவும் அதியுயர் கௌரவமான மார்ஷல் ஒப் ஸ்ரீ லங்கா பதவியை நான் பெற்றுக்கொள்வேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா தெரிவித்தார்.

இது தொடர்பில் மேலும் தெரிவித்த அவர், உயிர்த்த ஞாயிறுத் தாக்குலில் பிரதான சூத்திரதாரி சஹ்ரானாக இருக்க முடியாது. பிரதான சூத்திரதாரியாக வேறொருவர் இருக்க வேண்டும். பிரதான சூத்திரதாரி தாக்குதலில் உயிரைப் பலிகொடுக்க மாட்டார்கள்.அதேபோல் சூத்திரதாரியாக சர்வதேச மட்டத்தில் ஒருவர் இருப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. ஆனால் தேசிய மட்டத்தில் ஒருவர் இருக்க முடியும். முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும், அப்போது பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்கவுமே இந்தத் தாக்குதலுக்கு பொறுப்புக்கூற வேண்டும். இதனை நான் ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான தெரிவுக்குழுவின் விசாரணை அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேன் என்றார்.

ஈஸ்டர் தாக்குல் நடைபெற்ற பின்னர் ஏன் உடனடியாக நாட்டுக்கு வரவில்லை என நான் அப்போதைய ஜனாதிபதி மைத்திரியிடம் கேட்டிருந்தேன். சிங்கப்பூரிலிருந்து இலங்கைக்கு வந்த விமானத்தில் ஆசனங்கள் இல்லை என மைத்திரி கூறினார். ஆனால் ஆசனங்கள் இருந்தன.



அது தொடர்பான ஆவணங்களுடனேயே நான் விசாரணைக்கு சென்றிருந்தேன் எனவும் தெரிவித்தார். முன்னாள் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ எனது சீருடையில் இருந்த நான்கு நட்சத்திரங்களையும் அகற்றியிருக்கவில்லை என்றால் எனக்கு ஒருபோதும் பீல்ட் மார்ஷல் பதவி கிடைத்திருக்காது. இதற்காக நான் மஹிந்தவுக்கு நன்றிகூற வேண்டும் எனவும் தெரிவித்தார்.

## இவ்வார இறுதியில் ரஞ்சனுக்கு விடுதலை

பா.நிரோஸ்

முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ரஞ்சன் ராமநாயக்க பொதுமன்னிப்பின் கீழ் இவ்வார இறுதியில் விடுதலை செய்யப்படலாம் என ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்தார்.

நீதிமன்ற அவமதிப்பு குற்றச்சாட்டில் சிறை தண்டனை அனுபவித்து வரும் ரஞ்சன் ராமநாயக்கவை சிறைச்சாலைக்கு சென்று மயந்த திஸாநாயக்க பார்வையிட்டார். இதன்போது ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இவ்வாரம் ரஞ்சன் ராமநாயக்க பொதுமன்னிப்பின் கீழ் விடுதலை செய்யப்படலாம். எந்தவிதமான நிபந்தனைகளுமின்றி ரஞ்சன் விடுதலை செய்யப்பட வேண்டும். இல்லை என்றால், 11 வருடங்களுக்கு ரஞ்சனால் அரசியலில் ஈடுபட முடியாது. ஐவருக்கு மேலதிகமாக எவரையும் சந்திக்க முடியாத நிலையும் ஏற்படும் எனவும் தெரிவித்தார்.

## புதிய நியமனங்கள், மாற்றங்களுக்கு ஜனாதிபதியினால் குழுவொன்று நியமனம்

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் புதிய நியமனங்கள் அல்லது மாற்றங்களுக்கு, முன் அனுமதி பெறுவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க குழுவொன்றை நியமித்துள்ளார்.

ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க தலைமையிலான குழுவின் ஏனைய உறுப்பினர்களாக பிரதமரின் செயலாளர் அனுர திஸாநாயக்க, அமைச்சரவை செயலாளர் டபிள்யூ. எம்.டி.ஜே. பெர்னாண்டோ ஆகியோர் செயற்படுவார்கள்.இந்தக் குழுவின் செயலாளராக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சமிந்த குலரத்ன நியமிக்கப்பட்டுள்ளார்.

அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர்கள் பதவிகளில் மாற்றம் செய்ய வேண்டுமாயின், நியாயமான காரணங்களுடன் இந்தக் குழுவிடம் பரிந்துரைகளைச் சமர்ப்பித்து முன் அனுமதி பெறுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது.

முன் உடன்பாடுகளின்றி, அரச கூட்டுத்தாபனங்கள், சபைகள் மற்றும் அரச நிறுவனங்களின் தலைவர் மற்றும் பணிப்பாளர் பதவிகளில் மாற்றம் செய்யுமாறு ஜனாதிபதியிடம் அவ்வப்போது விடுக்கப்பட்ட எழுத்து மூலமான கோரிக்கைகள் மற்றும் சில முறைசாரா நியமனங்கள் தொடர்பில் அவதானம் செலுத்தி இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பாக ஜனாதிபதி செயலாளரின் கையொப்பத்துடன் அனைத்து அமைச்சுகளின் செயலாளர்களுக்கும் நேரடியாக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதுடன், அது தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக பிரதமரின் செயலாளர் மற்றும் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சுக்கும் இக்கடிதத்தின் பிரதிகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

முப்பது இலட்சம் ரூபாய் பெறுமதியான

# வாழ்வாதாரம் கையளிப்பு

■ பேரின்பராஜா சபேஷ்

மட்டக்களப்பு - ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட களுவன்கேணி கிராமத்தில் மிகவும் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட குடும்பமொன்றுக்கு லண்டனை தளமாக கொண்டு இயங்கும் லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரால் வீடு உட்பட 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதாரத்திட்டம் வழங்கப்பட்டுள்ளது.

களுவன்கேணி கிராமத்தில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட நிலையில் பல குடும்பங்கள் வசிப்பதாக லண்டன் ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கமைய, லண்டன் ஈழபதீஸ்வரர் கோவிலின் கிராமிய சமூக பொருளாதார மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ், தெரிவுசெய்யப்பட்ட பயனாளியான கிருஸ்ணபிள்ளை நிமிலேஸ்வரி குடும்பத்துக்கு 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான வாழ்வாதார உதவிகள் வழங்கப்பட்டன.

லண்டனை ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்துக்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர் நாகராஜா ஆனந்தராஜா தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலாளர் கே.தனபாலசுந்தரம் கலந்துகொண்டு, வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.





ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வேல் பரமதேவா மற்றும் லண்டனை ஈழபதீஸ்வரர் கோவில் நிர்வாக சபையின் உதவித் திட்டத்திற்கான மட்டக்களப்பு மாவட்ட இணைப்பாளர்களான நாகராஜா ஆனந்தராஜா, லோகநாதன் அனோஜன் ஆகியோர் இணைந்து வாழ்வாதார உதவிகளை வழங்கிவைத்தனர்.

வசிப்பதற்கான வீடு, வாழ்வாதாரத்துக்கு ஆடுகள், கோழிகள், தாராக்கள், வளர்ப்பதற்கான நிரந்தரமான கூடு, தொழில் புரிவதற்காக சைக்கிள் என்பன வழங்கப்பட்டன.

வீட்டு உரிமையாளருக்கு கடந்த காலத்தில் மீன்பிடித்தொழிலில் ஏற்பட்ட நட்டம் காரணமாக பெற்ப்பட்ட கடனைச் செலுத்துவதற்காக 50 ஆயிரம் ரூபாய் பணமும் இந்நிகழ்வில் வழங்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இறந்த யானையின்

## உடல்பாகம் புதைக்கப்பட்டது

■ தீஷான் அஹமட்

திருகோணமலை - சேருநுவர பொலிஸ் பிரிவிலுள்ள ஸ்ரீ மங்களபுர காட்டுப் பகுதியில் யானையொன்று கடந்த மூன்று தினங்களுக்கு முன்னர் இறந்திருந்தது.

குறித்த யானையை பரிசோதனை செய்வதற்காக மிருக வைத்தியர் வருகை தந்து பிரேத பரிசோதனை செய்வதற்கான உடல் பாகங்களை நேற்று (16) காலை எடுத்துச் சென்றனர்.

அத்தோடு, இறந்த யானையினது ஏனைய உடல் பாகங்கள் பெக்கோ இயந்திரத்தின் உதவியுடன் அவ்விடத்திலே புதைக்கப்பட்டன.



இவ் யானையின் உடல் பாகத்தில் காயங்கள் காணப்படுவதோடு இறப்புக்கான காரணம் இதுவரை கண்டறியப்படவில்லை.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.

உயிர் காக்கும்

## இரத்ததானம் இன்று

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு ஸலாமா பௌண்டேஷனின் ஏற்பாட்டில், 6ஆவது தடவையாக மேற்கொள்ளப்படும் "உதிரம் கொடுப்போம்; உயிர் காப்போம்" எனும் தொனிப்பொருளிலான இரத்ததான முகாம், இன்று புதன்கிழமை (17) காலை 08 மணி தொடக்கம் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு ஜாமியுஸ்ஸலாம் பள்ளிவாயலில் இடம்பெறவுள்ள குறித்த இரத்ததான முகாமிற்கு குருதிக் கொடையாளர்களை, மட்டக்களப்பு ஸலாமா பௌண்டேஷன் அமைப்பின் ஏற்பாட்டாளர்கள் அழைக்கின்றனர்.

தான்தோன்றீஸ்வரர் கோவிலுக்கு

## புதிய நிர்வாக சபை தெரிவு

■ எம்.எஸ்.எம் நூர்தீன்

மட்டக்களப்பு - கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோவில் பரிபாலன சபைக்கு புதிய வண்ணக்குமார் உள்ளிட்ட நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

தேசமகா சபையின் தீர்மானத்துக்கமைய இந்த நிர்வாகத் தெரிவு இடம்பெற்றுள்ளது.

இதன்படி, புதிய தலைவராக இ.மேகராசா, செயலாளராக சி.கங்காதரன், பொருளாளராக ச.கோகுலகிருஸ்ணன் ஆகியோரும் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

அதேவேளை, கொக்கட்டிச்சோலை ஸ்ரீ தான்தோன்றீஸ்வரர் கோவில் வருடாந்த மகோற்சவம், எதிர்வரும் 29ஆம் திகதி திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

அதனைத் தொடர்ந்து திருவிழாக்கள் இடம்பெற்று எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 11ஆம் திகதி தேரோட்டமும், அதனைத் தொடர்ந்து திரு வேட்டை திருவிழாவும் இடம்பெற்று, செப்டெம்பர் 12ஆம் திகதி பெருமானின் தீர்த்தோற்சவத்துடன் இவ்வாண்டுக்கான மகோற்சவம் நிறைவடையவுள்ளது.



## விலைப்பட்டியல் காட்சிப்படுத்தல்

■ அஸ்லம் எஸ்.மௌலானா

கல்முனை மாநகர சபை எல்லையினுள் மாட்டிறைச்சிக்கு கட்டுப்பாட்டு விலை நிர்ணயிக்கப்பட்டதையடுத்து, அனைத்து மாட்டிறைச்சி கடைகளிலும் விலைப்பட்டியலை காட்சிப்படுத்தும் நடவடிக்கை, நேற்று (16) முன்னெடுக்கப்பட்டது.

மாநகர மேயர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம். றகீபின் விசேட பணிப்பின் பேரில், மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் இந்நடவடிக்கையில் ஈடுபட்டனர். இதன்போது மறு அறிவித்தல் வரை குறித்த விலைப்பட்டியல் தொடர்ந்தும் காட்சிப்படுத்தப்பட்டிருக்க வேண்டும் எனவும் உரிய கட்டுப்பாட்டு விலை மீறப்பட்டு, அதிகரித்த விலை விற்கப்படுமாயின் எவ்வித முன்னறிவித்தலுமின்றி குறித்த கடைகள் மாநகர சபையினால் இழுத்து மூடப்படும் எனவும் வியாபாரிகள் அறிவுறுத்தப்பட்டனர்.

அதேவேளை, மாட்டிறைச்சிக் கடைகளில் டிஜிட்டல் தராசு பயன்படுத்துவதற்கு இரு வார கால அவகாசம் வழங்கப்பட்டிருப்பதுடன், எதிர்வரும் 01.09.2022 ஆம் திகதி முதல் டிஜிட்டல் தராசு பயன்படுத்தத் தவறுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

கல்முனை மாநகர சபை எல்லையினுள் 35 மாட்டிறைச்சி கடைகள் இயங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

புதிய வலயக் கல்விப் பணிப்பாளர்

## அமீருக்கு வரவேற்பு



■ சகா

சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்ட எஸ்.எம்.எம்.அமீர், நேற்று (16) கல்வி சார் உத்தியோகத்தர்களால் வரவேற்பளிக்கப்பட்டார்.

புதிய வலயக் கல்விப் பணிப்பாளர் அமீருக்கு, கோட்டக் கல்வி பணிப்பாளர் எம்.ஏ.சபூர்தம்பி, உதவி கல்விப் பணிப்பாளர் வி.ரி.சகாதேவராஜா ஆகியோர் மாலை சூட்டினர்.

ஏனைய கல்வி சார் உத்தியோகத்தர்களும் இதில் கலந்துகொண்டனர்.

அதன் பின்னர் கல்வி அபிவிருத்திக் கூட்டம் நடைபெற்றது.

# குடிநீருக்கும் அதிக விலை

## உணவகத்துக்கு எதிராக நடவடிக்கை

■ எம்.றொசாந்த்

தண்ணீர் போத்தலை அதிக விலைக்கு விற்பனை செய்ததாக நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றுக்கு எதிராக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.


நெல்லியடியில் உள்ள உணவகம் ஒன்றில் 35 ரூபாய் விற்பனை விலையாக பொறிக்கப்பட்ட தண்ணீர் போத்தலை 70 ரூபாய்க்கு விற்பனை செய்வதாக பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபைக்கு முறைப்பாடு கிடைக்கப்பெற்றது.

குறித்த முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை முன்னெடுத்த அதிகாரிகள், அதிக விலைக்கு தண்ணீர் போத்தலை விற்பனை செய்தமையை உறுதிப்படுத்தி நடவடிக்கை எடுத்தனர். அதேவேளை, தண்ணீர் போத்தலை சான்று பொருட்களாகவும் கைப்பற்றினர்.

அதனை நீதிமன்றில் பாரப்படுத்தி, குறித்த உணவக உரிமையாளருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக யாழ். மாவட்ட பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபை அதிகாரிகள் தெரிவித்தனர்.

இவ்வாறான முறைகேடுகள் தொடர்பில் பொதுமக்கள் முறைப்பாடுகள் வழங்கும் போது விரைந்து சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அதிகாரிகள் மேலும் தெரிவித்தனர்.







## வீதி விளக்குகளை திருத்தவும்



■ நடராசா கிருஸ்ணகுமார்

முல்லைத்தீவு - கரைதுறைப்பற்று பிரதேசசபை எல்லை பரப்பில் பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தப்பட வேண்டுமென கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் த.அமலன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "நீண்ட காலமாக பழுதடைந்த வீதி விளக்குகள் திருத்தம் செய்யப்படாமல் உள்ளது. இது தொடர்பாக பொதுமக்களால் முறைப்பாடுகள் தெரிவிக்கப்படுகின்றன.

"பிரதேச சபையின் வளங்களைப் பயன்படுத்தி நீண்ட காலமாக திருத்தப்படாமல் உள்ள வீதி விளக்குகள் திருத்தப்பட வேண்டும்.

"அத்துடன், புதிய வீதி விளக்குகள் விரைவாக பொருத்தப்பட வேண்டும். பொதுமக்கள் செறிந்து வாழும் பகுதிகளிலேயே நீண்ட காலமாக வீதி விளக்குகள் பழுதடைந்த நிலையில் காணப்படுகின்றன.

"இவை திருத்தம் செய்யப்பட வேண்டும். பிரதேச சபை உறுப்பினர்களின் வட்டாரங்களில் முன்னுரிமை அடிப்படையில் தேவையின் முக்கியம் கருதி வீதி விளக்குகள் பொருத்தப்பட வேண்டும்" எனவும் பிரதேச சபை உறுப்பினர் தெரிவித்தார்.

## கடலுக்குள் ஒளிபாச்சிய மீனவர்கள் அதிரடி கைது

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு கடலில் தடைசெய்யப்பட்ட கடற்தொழில் நடவடிக்கையில் ஒன்றான கடலுக்குள் ஒளிபாச்சி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கொக்கிளாய் கடற்பரப்பில் 3 படகுகளும், மாத்தளன் கடற்பரப்பில் ஒரு படகும், வலைஞர்மடம் கடற்பகுதியில் இரண்டு படகுகள் என மொத்தமாக 6 படகுகளுடன் 8 மீனவர்கள், நேற்று முன்தினம் (15) இரவு கைது செய்யப்பட்டுள்ளார்கள்.

கைது செய்யப்பட்ட நபர்களையும் சான்றுப் பொருட்களையும் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தும் நடவடிக்கையில் கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களம் ஈடுபட்டுள்ளது.

முல்லைத்தீவு கடற்பரப்பில் சட்டவிரோத கடற்றொழில் நடவடிக்கையில் சில மீனவர்கள் ஈடுபட்டு வருவதாக தெரிவித்துவரும் நிலையில், அதனை கட்டுப்படுத்தும் நடவடிக்கையில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்கள அதிகாரிகள் நடவடிக்கை எடுத்திருந்த போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.





## யாழில் கோலாகலமான பூப்புனித நீராட்டு விழா

■ விநிதர்ஷன்

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் (15) இடம்பெற்ற பூப்புனித நீராட்டு விழாவொன்று, பலரையும் வியக்க வைத்துள்ளது.

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியின் பூநாரி மடத்தடியில் உள்ள தனியார் மண்டபம் ஒன்றில் பூப்புனித நீராட்டு விழாவொன்று இடம்பெற்றது.

இதற்காக வண்ணார்பண்ணை நாச்சிமார் கோவில் பகுதியில் இருந்து நிகழ்வு மண்டபம் வரை காங்கேசன்துறை வீதி வழியாக யானை, குதிரை வண்டில், சுதகளி, மேள தாள வாத்தியங்கள் சகிதம் பெண் மற்றும் அவரது உறவினர்கள் பவனியாக மண்டபம் வரை அழைத்துவரப்பட்டனர்.

தென் பகுதியில் இருந்து யானை மற்றும் சுதகளி கலைஞர்கள் கொண்டுவரப்பட்டு, இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதனை காண்பதற்காக பெருமளவு மக்கள் வீதியில் ஒன்றுகூடியிருந்தனர்.

## தேவையான ஆசிரியரே வேண்டும்; தேவையற்ற ஆசிரியர் வேண்டாம்

### புதுக்குடியிருப்பில் போராட்டம்

■ செ.கீதாஞ்சன்

முல்லைத்தீவு - புதுக்குடியிருப்பு பகுதியில் உள்ள மந்துவில் அரசரத்தினம் வித்தியாலத்தில் புலமைப் பரிசில் பரீட்சை எழுதும் மாணவர்களுக்கு கல்வி கற்பித்து வந்த ஆசிரியரை இடமாற்றியதைக் கண்டித்து மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் இணைந்து பாடசாலையின் வாயிற்கதவை மூடி, நேற்று (16) காலை கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது, பாடசாலையில் கல்வி கற்பித்து வரும் பிறிதொரு ஆசிரியர் இந்த மாணவர்களுக்கு தேவை இல்லை என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

குறித்த ஆசிரியர், மாணவர்களுக்கு அடிப்பது மற்றும் தனது காதல் கதையை மாணவர்களுக்கு சொல்லிக் கொடுப்பதுமான செயற்பாடு, மாணவர்களை காதல் திசையில் இழுக்கும் செயற்பாடு என குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இது குறித்து முல்லை வலயக் கல்வி அலுவலகத்துக்கும் முறைப்பாடு செய்துள்ளதாக பெற்றோர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இந்த ஆசிரியர் பாடசாலைக்குத் தேவை இல்லை என்றும் தேவையான ஆசிரியருக்கு இடம்மாற்றம் வழங்கியதை இரத்துச் செய்து அவரை மீண்டும் கற்றல் செயற்பாட்டில் ஈடுபட வலியுறுத்தியும் கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து, போராட்ட இடத்துக்கு வருகை தந்து புதுக்குடியிருப்பு கோட்டக் கல்வி அலுவலகத்தை சேர்ந்த அதிகாரி ஒருவர், பெற்றோர்களுடன் உரையாடி,

## அதிபர் தாக்கியதில் மாணவன் காயம்

### விசாரணை ஆரம்பம்

■ எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் - நல்லூர் பகுதியில் அமைந்துள்ள பாடசாலை ஒன்றில் அதிபரால் தாக்கப்பட்டு, 14 வயது மாணவன் காயமடைந்துள்ளமை தொடர்பில் யாழ்ப்பாணம் மாவட்ட சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை விசாரணைகளை முன்னெடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் நேற்று முன்தினம் (15) கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

நல்லூர், விநாயகர் வீதியைச் சேர்ந்த 14 வயது மாணவனே சம்பவத்தில் நெற்றியில் காயம் ஏற்பட்டதுடன், உடல் மற்றும் உள ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்.

தான் சொன்ன பணியைச் செய்யவில்லை என்று தெரிவித்து அதிபர், மாணவனை கடுமையாகத் தாக்கினார் என்று ஆரம்ப விசாரணைகளில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, பொலிஸ் புலனாய்வுப் பிரிவிலும் இந்தச் சம்பவம் தொடர்பில் அறிக்கையிட்டுள்ளது.

## தையல் கடைக்காரர் மீது வாள்வெட்டு

■ எம்.றொசாந்த்

யாழ்.பருத்தித்துறை நகரில் உள்ள தையல் கடை ஒன்றுக்குள் முகமூடி அணிந்து உள் நுழைந்த கும்பல் கடையை அடித்து நொருக்கியதுடன், உரிமையாளரை வாளால் வெட்டிவிட்டு தப்பிச் சென்றுள்ளது.

குறித்த சம்பவம், நேற்று முன்தினம் (15) இரவு மின்வெட்டு அமுலில் இருந்த வேளையில் இடம்பெற்றுள்ளது.

சம்பவத்தில் க.பாலகுமார் (வயது 44) என்பவர் காயமடைந்த நிலையில், பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

ஸ்ரீபாத கல்லியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும்

# தோட்டப்புற மாணவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கவும்



ஸ்ரீபாத கல்லியற் கல்லூரியில் தோட்டப்புற மாணவர்கள் உள்வாங்கப்படும் சதவீதம் குறைந்துள்ளமை தொடர்பில் கல்வி அமைச்சிடம் இ.தொ.கா தலைவர் செந்தில் தொண்டமான் விளக்கப்படுத்தியுள்ளதுடன், தோட்டப்புற மாணவர்களை அதிகமாக உள்வாங்கும் பொறிமுறையொன்றின் அவசியம் குறித்தும்; வலியுறுத்தியுள்ளார்.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமானின் முயற்சியால் 1992ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் கடந்த 30 வருடங்களுக்கு முன்னர் தோட்டத் தொழிலாளர்களது பிள்ளைகளை மாத்திரமே சேர்க்க முடியுமென்ற நிலைமை காணப்பட்டது.

ஆனால் தற்போது தோட்டங்களில் பணிப்புரிபவர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்துவிட்டது. மேலும் தோட்டத்தில் தற்காலிக தொழில் முறைமை (அவுட்குரோவர்) முறைமை புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட காரணத்தால் தோட்டத் தொழிலாளர்களுக்கு ஊழியர் சேமலாப மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் அறவிடப்படுவதில்லை இதனால் தோட்டப்புறங்களில் உள்ள பிள்ளைகள் ஸ்ரீபாத கல்வியற் கல்லூரிக்கு உள்வாங்கப்படும் எண்ணிக்கை குறைவடைந்துவிட்டது.

இக்கல்லூரிக்கு மாணவர்களை உள்வாங்கும் பொறிமுறையை காலத்துக்கு ஏற்றால்போல் மாற்றியமைக்க வேண்டியுள்ளது. தற்போதைய சூழ்நிலையில் இக்கல்லூரிக்கான அனுமதியை பெற தாய் அல்லது தந்தையின் ஊழியர் சேமலாப நிதி மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதிகள் மாத்திரம் உள்வாங்கப்பட்டுள்ளது.அதை மாற்றி அமைத்து தமது மூதாதையினர் தோட்டங்களில் பணிப்புரிந்திருந்தால் அவர்களுடைய குடும்பத்தை சேர்ந்தவர்களுக்கு கட்டாயம் அனுமதியை வழங்க வேண்டும். அதே போன்று தோட்டப் பாடசாலைகளில் மாணவர் ஒருவர் கல்வி கற்றிருப்பதற்கான அத்தாட்சியை உறுதிப்படுத்தினால் ஸ்ரீபாத கல்வியற் கல்லூரியில் கல்வி கற்பதற்கான வாய்ப்பை வழங்க வேண்டும் என்ற கோரிக்கையை கல்வி அமைச்சிடம் முன்வைத்துள்ளார்.

பதுளையில் இந்த வருடத்தில் இதுவரை

# 4,000 பேரை நாய்கள் கடித்தன


■ பாலித ஆரியவன்ஸ

பதுளையில் இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் நாய் கடிக்கு இலக்கானவர்களின் எண்ணிக்கை 4 ஆயிரமாக அதிகரித்துள்ளதாக அரச வைத்திய அதிகாரிகளின் சங்கத்தின் பிரதி செயலாளரும் பதுளை மாவட்ட ஒருங்கிணைப்பாளரமான பாலித ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊவா மாகாணத்திலுள்ள அரச வைத்தியசாலைகளில் ஏற்பட்டுள்ள கடுமையான மருந்து தட்டுபாடு தொடர்பில், பதுளை- பொது வைத்தியசாலையில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நாய் மற்றும் பூனைக் கடிகளுக்கு இலக்காவதால் ஏற்படும் நீர்வெறுப்பு நோயைத் தடுப்பதற்காக வழங்கப்படும் ஊசி மருந்துகளுக்கு பாரிய தட்டுபாடு நிலவுவதாகத் தெரிவித்த அவர், இவ்வாறு செல்லப்பிராணிகள்



அல்லது கட்டாகாலி பிராணிகளால் ஒருவர் காயங்களுக்கு உள்ளானால் அந்த பிராணியை 14 நாட்களுக்கு பாதுகாப்பாக பராமரிக்குமாறு ஆலோசனை வழங்கும் அளவிற்கு சிகிச்சைகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன என்றார்.

இதன்மூலம் மருந்து தட்டுபாடு நிலைமை எவ்வளவு தூரம் மோசமடைந்துள்ளது என்பதை புரிந்துக்கொள்ளலாம் என்றார்.

மேலும் வெளிநோயாளர்




பிரிவுக்கு 10 மருந்துகள் தேவை எனினும் 6 மருந்துகள் மாத்திரமே காணப்படுகின்றன. அதி தீவிர பிரிவுக்கு தேவையான மருந்துகள் இல்லை. அத்துடன் இருதய நோயாளர்களுக்கு தேவையான மருந்தும் கையிருப்பில் இல்லை என்றார்.

நீரிழிவு நோயாளர்களுக்கு தேவையான மருந்துகளை உரிய காலத்தில் வழங்கப்படாது விடத்து, நீரிழவு நோயை கட்டுப்படுத்த முடியாது என்றார். இதனை விட சிறுநீரக நோயாளர்களின் நிலை மிகவும் கவலைக்கிடமாக உள்ளது என்றார்.

அரச வைத்தியசாலைகளில் மாத்திரமல்ல சில தனியார் பாமசிகளிலும் மருந்துகள் இல்லை. அவ்வாறு இருந்தாலும் விலைகள் தாங்கிக்கொள்ள முடியாதளவு உள்ளன என்றார்.

இந்த நிலையில், பதுளை பொது வைத்தியசாலைக்கு சிகிச்சைக்காக வருகைத் தரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுவதாகவும் வார்டுகளில் தங்கி சிகிச்சைப் பெறுவதற்கு முடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் நோயாளர்கள் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்றார்.

விலையேற்றம் காரணமாக

## பலர் தொழிலை இழந்தனர்

■ மலைவாஞ்ஞன்



நாட்டில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியை தொடர்ந்து கட்டட நிர்மாணப் பொருட்களின் விலைகள் என்றுமில்லாதவாறு அதிகரிக்கப்பட்டுள்ளன.

இதனால் நுவரெலியா மாவட்டத்தில் பலர் நிர்மாணப் பணிகளை நிறுத்தியுள்ளதனால் மேசன் மற்றும் தச்சு தொழில் உட்பட கூலி தொழிலில் ஈடுபடுபவர்கள் பலர் பாதிப்புக்கு உள்ளாகியுள்ளதாக கட்டட தொழிலில் ஈடுபடுபவர்கள் தெரிவிக்கின்றனர்.

குறித்த தொழிலினை நம்பி பலர் பல்வேறு சுய தொழில்களில் ஈடுப்பட்டு வந்தனர்.

குறிப்பாக சீமெந்துக்கல் தயாரித்தல், மணல் கொண்டு வருதல் , ஜன்னல்கள் தளபாடங்கள் தயாரித்தல், பலகை விற்பனையாளர்கள், சீமந்து விற்பனை, இருப்பு விற்பனை, தளம் வெட்டுபவர்கள், உள்ளிட்ட பல தொழிற்றுறை இதனால் பாதிக்கப்பட்டுள்ளது.

.குறித்த தொழிலினை மாத்திரம் நம்பி வாழ்ந்த பல குடும்பங்கள் இன்று நடுத்தெருவுக்கு வந்துள்ளதாகவும் இதனால் இவர்களின் குடும்பங்கள் பாரிய பொருளாதார நெருக்கடிக்கு முகம் கொடுத்துள்ளதாகவும் பலர் தெரிவிக்கின்றனர்.

எனவே இது குறித்து அரசாங்கம் கவனமெடுத்து கட்டட பொருட்கள் விலை அதிகரிப்பினை கருத்தில் கொண்டு இந்த துறைகளில் ஈடுபடுபவர்களை பாதுகாக்க நடவடிக்கை எடுக்கப்ப வேண்டும் என இவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

## தையல் இயந்திரம் கையளிப்பு



நுவரெலியா மாவட்டம் அக்கரப்பத்தனை பிரதேசத்தை சேர்ந்த வறுமைக்கோட்டிற்கு கீழ் வசிக்கும் செல்வி. காந்த ரூபினினுக்கு அப் பிரதேசத்தை சேர்ந்த கிராம சேவகரின் பரிந்துரைக்கு அமைய, சுய தொழிலை ஊக்குவிக்கும் முகமாக தையல் இயந்திரம் ஒகஸ்ட் 15ஆம் திகதியன்ற கையளிக்கப்பட்டது

எபோட்சிலி தோட்ட லயக்குடியிருப்பில் தீ

## 6 வீடுகள் பகுதியளவில் சேதம்

■ ரஞ்சித் ராஜபக்ஸ

ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அபோட்சிலி தோட்டத்தின் மொண்டிபெயார் பிரிவிலுள்ள லயக் குடியிருப்பு ஒன்றில் நேற்று (16) காலை தீபரவல் சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது 20 வீடுகளைக் கொண்ட குறித்த லயக்குடியிருப்பின் 6 வீடுகள் பகுதியளவில் எரிந்து நாசமாகியுள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

காலை 8 மணியளவில் ஏற்பட்ட தீயானது ஏனைய வீடுகளுக்கு பரவாமல் தோட்ட நிர்வாக அதிகாரிகளும் தோட்டத் தொழிலாளர்களும் இணைந்து கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

தீ விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்பதுடன், தீ விபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படவில்லை.

தீ விபத்து தொடர்பில் ஹட்டன் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.





## சின்னம் அணிவிப்பு...

மாத்தளை– பாக்கியம் தேசிய கல்லூரி மாணவத் தலைவர்களுக்கான சின்னம் அணிவிக்கும் நிகழ்வு, நேற்று (16) காலை பாடசாலை காந்தி மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வின் பிரதம அதிதியாக திருமதி.சாந்திமதி (முன்னாள் மாத்தளை இந்து தேசிய கல்லூரியின் அதிபர்) கலந்து கொண்டார். (ஆ.சுதாகரன்)

நீதிமன்ற தீர்ப்பு குறித்து

## இ.தொ.கா தெளிவுப்படுத்தியது

■ ஆ.ரமேஸ்

தோட்டத் தொழிலாளர்களின் ஆயிரம் ரூபாய் சம்பள உயர்வு தொடர்பில் நீதிமன்றத்தால் அண்மையில் வழங்கப்பட்ட தீர்ப்பு குறித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸால் தொழிலாளர்களுக்கு விளக்கமளிக்கப்பட்டது.

இதற்கமைய, உடப்புஸ்ஸலாவை எனிக், டலோஸ், சென்மார்கிரட், எமஸ்ட் மற்றும் றப்பானொக் ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த தொழிலாளர்களுக்கு நேற்று முன்தினம் (15) இது குறித்து விளக்கமளிக்கப்பட்டது.

> **ஆயிரம் ரூபாவை வழங்க வர்த்தமானி வெளியிட்ட நிலையில், அதை எதிர்த்து பெருந்தோட்ட கம்பனிகள் அதை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தது**

இதன்போது விளக்கமளித்த உடப்புஸ்ஸலாவ பிராந்திய இ.தொ.கா மாவட்ட பிரதிநிதி ஐ.ராஜேஸ்வரி, சம்பள நிர்ணய சபையினால் நாளாந்த வேதனமாக ஆயிரம் ரூபாவை வழங்க வர்த்தமானி வெளியிட்ட நிலையில், அதை எதிர்த்து பெருந்தோட்ட கம்பனிகள் அதை எதிர்த்து உயர் நீதி மன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தன.

கிட்டத்தட்ட 17 மாதத்திற்கு மேலாக குறித்த வழக்கு முன்னெடுக்கப்பட்ட போதும் , வழக்கின் தீர்ப்பு தொழிலாளர்களுக்கு சாதகமாக அமைந்தது .இதற்கு காரணம் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் என்பதை தொழிலாளர்கள் உணர வேண்டும் என்றார்.



நுவரெலியாவில் 3 மணித்தியாலத்தின் பின்னர்

## போராட்டத்தை கைவிடப்பட்டது

■ டி.சந்ரு

உரியமுறையில் டீசல் வழங்குமாறு கோரி நுவரெலியாவில் தனியார் பஸ் சாரதிகள் நேற்று (16) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் நுவரெலியாவில் தனியார் பஸ் சேவைகள் முழுமையாக ஸ்தம்பிதமடைந்தன.

நுவரெலியாவில் இலங்கை போக்குவரத்து சபையில் தனியார் பஸ்களுக்கு 4,000 ஆயிரம் ரூபாய்க்கு வழங்க வேண்டிய டீசலை 2,500 ரூபாய்க்கு மாத்திரம் வழங்குவதாக தெரிவித்தும் மிகுதியான 1,500 ரூபாய்க்கான டீசலினை உரிய முறையில் வழங்க வேண்டும் என கோரி தனியார் பஸ் சாரதிகள் இந்த பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

இதனால் இலங்கை போக்குவரத்து சபைக்கு சொந்தமான பஸ்ககளையும் போக்குவரத்திற்கு அனுமதிக்காது, தனியார் பஸ் சாரதிகள் பணிபகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

சுமார் மூன்று மணித்தியாலங்ளின் பின்னர் நுவரெலியா பொலிஸாரின் தலையீட்டால் உரிய முறையில் டீசல் பெற்று தருவதாக கூறியதன் பின்னர், பகிஷ்கரிப்பினை கைவிட்டு வழமை போல் சேவையில் ஈடுபட்டனர்

தொழிலாளர்களின் நலன்சார்ந்த விடயங்களில்

## பெல்மோரல் நிர்வாகம் மாதிரி

■ துவாரகஷன்

தோட்டத் தொழிலாளர்களின் நலன் சார்ந்த விடயங்களில் அக்கறையுடன் செயல்படுவதில் அக்கரப்பத்தனை பெல்மோரல் தோட்ட நிர்வாகம் முன்னுதாரணமாக விளங்குகின்றது.

கடந்த வாரம் பெய்த மழை காரணமாக, தோட்ட தொழிலாளர்களின் தொழில் பாதிக்கப்பட்டதுடன் வாழ்வாதாரமும் முற்று முழுதாக பாதிக்கப்பட்டது.

இதனால் கிளைஸ்டல், பெல்மோரல், லோவர் கிரன்லி ஆகிய பிரிவுகளை சேர்ந்த 800-க்கும் மேற்பட்ட தொழிலாளர் குடும்பங்களில் பொருளாதாரப் பிரச்சினையைக் கருத்தில் கொண்டு

5,000 ரூபாய் பெறுமதியான உலர் உணவுப் பொருள்கள் தலா ஒவ்வொரு குடும்பங்களுக்கும் வழங்கி வைக்கப்பட்டன.

தோட்ட முகாமையாளர் சிந்தகெடி கொஸ்டா மற்றும் உதவி முகாமையாளர் .துசாரசம்பத் உள்ளிட்ட தோட்ட அதிகாரிகளின் பங்களிப்புடன் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.



பதுளை பொது வைத்தியசாலையில்

## வரிசை நீளுகின்றது

■ பாலித ஆரியவன்ஸ

பதுளை பொது வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிற்கு சிகிச்சைக்காக வரும் நோயாளர்களின் எண்ணிக்கை கடந்த சில நாட்களாக அதிகரித்துள்ளதாக வைத்தியசாலையின் பிரதி பணிப்பாளர் வைத்தியர் கயான் குரே தெரிவித்துள்ளார்.

கொரோனா தொற்று எரிபொருள் பிரச்சினை காரணமாக கடந்த காலங்களில் வைத்தியசாலைக்கு வரும் நோயாளர் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டிருந்தது.

ஆனால் தற்போது புதிய வகை வைரஸ் காய்ச்சல் ஒன்று பரவி வரும் நிலையில், சிகிச்சைக்காக வெளிநோயாளர் பிரிவுக்கு வரும் நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகிறது என்றார்.

# ரயிலில் மோதி நபர் ஒருவர் மரணம்

■ மலைவாஞ்ஞன்

ரயிலில் மோதுண்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர். மேற்படி சம்பவம் ஹட்டன் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட ஹட்டன் மல்லியைப்பூசந்தி பகுதியில் நேற்று (16) காலை 11.45 மணியளவில் இடம்பெற்றுள்ளது. கொழும்பிலிருந்து பதுளை நோக்கி பயணித்த ரயிலிலேயே குறித்த நபர் மோதுண்டுள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்தவர் மஸ்கெலியா-அப்கோட் பகுதியைச் சேர்ந்த 40 வயதுடைய சிவனு கண்ணியப்பன் வயது 40 என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இறந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக டிக்கோயா கிளங்கன் ஆதார வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன், இது தற்கொலையாக இருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# பிரதான பிரச்சினைகளை இனங்காண்பது முக்கியம்

அரசியலமைப்பின் 22ஆவது திருத்தம், பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், அதுதொடர்பில் வாதப்பிரதிவாதங்கள் ஆரம்பித்துள்ளன. அந்தத் திருத்தங்களை உடனடியாக நிறைவேற்ற வேண்டுமென ஒரு தரப்பினரும்,. இன்னும் சில திருத்தங்களை மேற்கொள்ள வேண்டுமென மற்றுமொரு சாராரும் கூறிவருகின்றனர்.

மொத்தத்தில் இந்த அரசாங்கம், அரசியலுடன் பொருளாதார பிரச்சினையைக் கலந்து தீர்ப்பதற்கே முயல்கின்றது என்றும், பரவலான விமர்சனங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. நமது நாட்டில் முன்னிலையில் இருக்கும் மிக முக்கியமான பிரச்சினைகளை இனங்கண்டு கொள்ளவேண்டும். இல்லையேல், பல பிரச்சினைகளை சந்தித்தே ஆக வேண்டும்.

அரசியல் ஸ்திரதன்மை இன்றேல், எந்தவோர் அமைப்பும் எந்தவொரு நாடும் உதவி, நன்கொடைகளை வழங்காது. அதற்காக முதலில் அரசியல் ஸ்திரத்தன்மையை ஏற்படுத்த வேண்டுமெனக் கூறி, அரசாங்கமொன்றை நிறுவி, பழைய அமைச்சரவைக்கு மீண்டும் உயிரூட்டப்பட்டுள்ளது.

பதில் ஜனாதிபதியாக இருந்த ரணில் விக்கிரமசிங்க, ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டதன் பின்னரும், பாராளுமன்றக் கூட்டத்தொடரை ஆரம்பித்து வைத்தபோது, “வாருங்கள்; சகலரும் இணைந்து செல்வோம்” என பகிரங்கமாக அழைப்பு விடுத்திருந்தார்.

அதற்குப் பின்னர், ஜே.வி.பி உள்ளிட்ட சில கட்சிகளைத் தவிர, ஏனைய கட்சிகளுடன் சர்வகட்சி அரசாங்கத்தை நிறுவுவது தொடர்பிலான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டிருந்தார். அதில் சில முன்னேற்றங்களை காணக்கூடியதாக இருந்தது. இதனிடையே, அரசியலமைப்பின் 22ஆவது திருத்தமும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

புதிய அரசாங்கம் நிறுவப்பட்டதன் பின்னர், அரசாங்கத்தை பாதுகாத்துக்கொள்ளும் வகையில் சட்டங்களை இயற்றிக்கொள்ளும், தங்களுடைய பதவிக்காலத்துக்கு தீங்கிழைத்துவிடுமோ என்ற அச்சம் ஒருசில பாராளுமன்ற உறுப்பினர்களிடத்தில் உள்ளது. குறிப்பாக, புதியவர்களிடமே இந்த அச்சம் ஏற்பட்டிருக்கும்.

இந்நிலையில், அரசியலமைப்பின் 22ஆவது திருத்தத்தில், புதிய பாராளுமன்றம் பதவியேற்ற இரண்டரை வருடங்களில், பாராளுமன்றத்தை கலைக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டுள்ளது. அதற்கு உறுப்பினர்கள் பலர் கடுமையான எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

நான்கரை வருடங்களின் பின்னரே கலைக்கவேண்டுமென வலியுறுத்தி உள்ளனர். பாராளுமன்றத்தின் பதவிக்காலம் ஐந்து வருடங்களாகும். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்படும் உறுப்பினர்கள் ஐந்தாண்டுகளை கழிக்கவேண்டும். இல்லையேல் அவர்களுக்கு ஓய்வூதியம் கிடைக்காமல் போகும்.

ஆக, நாட்டின் மீதோ, மக்களின் மீதோ எவ்விதமான கரிசனையையும் காண்பிக்காத ஒருசில உறுப்பினர்கள், ‘பாராளுமன்ற கலைப்பு’ விவகாரத்தை தூக்கிப்பிடித்துக் கொண்டு இருக்கின்றனர்.

பிரதான பிரச்சினையாக இருப்பது பொருளாதார பிரச்சினையாகும். இதனால், மக்களும் நாளாந்தம் அல்லல்பட்டுக் கொண்டிருக்கின்றனர். பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டெழுவதற்கான தீர்மானங்களை அரசாங்கம் அதிரடியாக எடுக்கவேண்டும்.

பொருளாதார பிரச்சினையை அரசியலுக்குள் கலந்து, பிசைந்து கொண்டு இருந்தால், நாடும் மக்களும் இன்னும் பல நெருக்கடிகளைச் சந்தித்தே ஆகவேண்டும் என்பதை நினைவூட்டுகின்றோம்.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

நெஞ்சம் குமைந்துகொண்டு இருக்கும்போது, ஆழமான, பெரிய செயல்களைச் செய்வதை, சற்றே ஒத்திவைத்து விடுவது நல்லது.

மனம் ஆசுவாசமடைந்த பின்னர், கருமங்களைப் படிப்படியாகச் செய்தால், அவை சிறந்த பெறுபேறுகளைத் தரும். வீட்டில் சண்டையிட்ட பின்னர், அலுவலகத்துக்கு வந்து, சக ஊழியருடன் சண்டையிடுவது அழகல்ல!

எந்த மனிதனாலும் எல்லா நேரத்திலும் இயல்பாக இருக்க முடிவதில்லை. புறச் சுமைகள் இன்று அதிகரித்த வண்ணம் உள்ளன. வாழ்க்கைச் செலவு கூடிவிட்டது. மக்கள் மனதில் நிம்மதி இல்லை.

போராட்டங்கள் அக உணர்விலும் வரும்; புறஉணர்விலும் வரும். சில விடயங்களில், ‘உடன் தீர்வு காண முடியாது’ என, நமக்குள் நாமே, உருப்போட்டுக் கொள்ளக்கூடாது. சஞ்சலங்களைச் சம்காரம் செய்யும் வழிகளைப் பொறுமையுடன் தேடுக!

தேவைகள் கூடும்போது, பிரச்சினைகளும் கூடுகின்றன. அதையும் ஒரே நேரத்தில் செய்யமுடியாது விட்டால், படிப்படியாகத் திட்டமிட்டு, சரியான முடிவு எடுத்தால், எல்லாமே ஈடேறி விடும்.

தங்களுக்கு மட்டுமே, கஸ்டங்கள் வருகின்றன என எண்ணக்கூடாது. துன்பங்களில் இன்பங்கள் இல்லை.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### பனங்காமம், மூன்றுமுறிப்பு பகுதிகளில்

## காட்டு யானைகளின் தொல்லை

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள பனங்காமம், மூன்றுமுறிப்பு பகுதிகளில், காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துள்ளதால், தாங்கள் அழிவுகளுடனும் அச்சத்துடனும் வாழும்நிலை ஏற்பட்டுள்ளதாக, இந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்குறித்த கிராமங்களில் வாழும் மக்கள், தமது வாழ்வாதாரத்தொழிலாக, விவசாயத்தையே நம்பி இருக்கின்றனர். இந்நிலையில், அண்மைய நாள்களாக, இந்தப் பகுதிகளில் காட்டு யானைகளின் தொல்லை அதிகரித்துக் காணப்படுகின்றது.

அதாவது, இரவு வேளைகளில் பயிர்ச்செய்கை நிலங்களுக்குள் புகுந்து, பயிர்களை அழித்து வரும் அதேவேளை, குடியிருப்பு காணிகளிலும் உள்ள தென்னை, வாழை, பலா போன்ற மரங்களையும் அழித்து வருகின்றன.

தற்போது வீடுகளுக்குள் நுழையும் அளவுக்கு யானைகளின் அட்டகாசம் அதிகரித்துள்ளதால், அழிவுகளும் பாதிப்புகளும் கடுமையாகியுள்ளன. எனவே, தமது கிராமங்களைச் சுற்றி, யானை வேலியை அமைத்துத் தரவேண்டும் என, இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யது பாஸ்கரன்



### புலம்பெயர் தமிழர்கள் விடயத்தில்

# நிலையான கொள்கை வேண்டும்



எம். எஸ். எம் ஐயூப்

இலங்கையில், அரச படைகளுக்கும் தமிழீழ விடுதலை புலிகள் அமைப்புக்கும் இடையிலான போர் முடிவடைந்து, கடந்து சென்ற 13 ஆண்டுகளில், இலங்கை அரசாங்கங்கள், இரண்டு முறை புலம்பெயர் தமிழர்களின் அமைப்புகளைத் தடை செய்துள்ளன. இரண்டு முறை, சில அமைப்புகளின் மீதான தடையை நீக்கியுள்ளன. கடந்த வாரம் இரண்டாவது முறையாக, அவ்வமைப்புகள் மீதான தடையை, அரசாங்கம் நீக்கியுள்ளது.

மேலும் விளக்கமாகக் கூறுவதாயின், 2014ஆம் ஆண்டுக்குப் பின்னரான எட்டு ஆண்டுகளிலேயே, இவ்வாறு அந்த அமைப்புகள் தடைசெய்யப்பட்டு, மீண்டும் அத்தடை நீக்கப்பட்டுள்ளது. ஆயினும், இந்நான்கு சந்தர்ப்பங்களிலும், தடை செய்யப்பட்ட மற்றும் தடை நீக்கப்பட்ட அமைப்புகளின் எண்ணிக்கை வேறுபட்டுள்ளது. குறிப்பிட்ட சில அமைப்புகள் மட்டுமே, இரண்டு முறையும் தடைசெய்யப்பட்டு, இரண்டு முறையும் தடை நீக்கப்பட்டுள்ளது.

புலம்பெயர் தமிழ் அமைப்புகளைத் தடை செய்த இரண்டு சந்தர்ப்பங்களிலும், ராஜபக்‌ஷர்களே, அதற்கான முடிவை எடுத்தனர். தடையை நீக்கிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் ரணில் விக்கிரமசிங்கவே, அதற்கான முடிவை எடுத்தார்.

2014ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதலாம் திகதி, ஜனாதிபதி மஹிந்த ராஜபக்‌ஷவின் அரசாங்கம், 16 அமைப்புகளையும் 424 நபர்களையும், தடைப் பட்டியலில் உள்ளடக்கியது.

அதற்கு அடுத்த வருடம், அரசாங்கம் மாறியதோடு, புதிய அரசாங்கத்தின் பிரதமரான ரணிலின் ஆலோசனையின் பேரில், 2015ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20ஆம் திகதி (20 மாதங்களுக்குப் பின்னர்), எட்டு அமைப்புகளினதும் 267 நபர்களினதும் தடைகள் நீக்கப்பட்டன.

அதேபோல், கடந்த வருடம் பெப்ரவரி 25ஆம் திகதி, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷவின் அரசாங்கம், ஏழு புலம்பெயர் தமிழ் அமைப்புகளையும் 389 நபர்களையும் தடைப் பட்டியலில் உள்ளடக்கியது. அதன் பின்னரும், ஜனாதிபதி ரணில், சுமார் 20 மாதங்களுக்குப் பின்னர், ஆறு அமைப்புகளினதும் 316 நபர்களினதும் தடையை நீக்கியுள்ளார்.

அதாவது, 2014 ஆம் ஆண்டு தடைசெய்யப்பட்ட சில அமைப்புக்களினதும் நபர்களினதும் அத்தடை இன்னமும் நீக்கப்படவில்லை. 2014ஆம் ஆண்டு அரசாங்கம் தடை செய்த அமைப்புகளில் சில அமைப்புகள், அப்போது இயங்கும் நிலையில் இருக்கவில்லை என்றும், சில நபர்கள் அத்தடை விதிக்கப்படுவதற்கு நீண்ட காலத்துக்கு முன்னரே, இறந்திருந்ததாகவும் ஊடகவியலாளர் டி.பி.எஸ் ஜெயராஜ் குறிப்பிட்டு இருந்தார்.

வேறு சில அமைப்புகள் முதலாவது முறை தடைசெய்யப்பட்டு, அத்தடை நீக்கப்பட்டதன் பின்னர், இரண்டாவது முறை (கடந்த வருடம்) தடை செய்யப்படவில்லை. சில அமைப்புகள், முதலாவது முறை தடை செய்யப்படவில்லை. ஆனால், இரண்டாவது முறை தடைப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. உலகத் தமிழர் பேரவை போன்ற சில அமைப்புகள், இரண்டு முறையும் தடை செய்யப்பட்டு, இரண்டு முறையும் தடை நீக்கப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருப்பதாகக் கூறியே, அரசாங்கம் இவ்வாறான தடையை விதிக்கிறது. அவ்வாறான அச்சுறுத்தல் இருப்பதாக, பாதுகாப்பு அமைச்சின் உயர் அதிகாரிகளே, அறிக்கை மூலம் அரசாங்கத்துக்கு தெரிவிக்க வேண்டும்.

எனினும், இதில் ஒரு விசித்திரமான விடயமும் நடைபெறுகிறது. அரசாங்கங்கள் மாறினாலும், பாதுகாப்பு அமைச்சின் முக்கிய உயர் அதிகாரிகள், எப்போதும் மாற்றப்படுவதில்லை. அந்த வகையில் பார்த்தால், அந்த அதிகாரிகள், இந்த அமைப்புகளை தடை செய்வதையும் அத்தடையை நீக்குவதையும் நியாயப்படுத்த வேண்டியுள்ளது.

உதாரணமாக, கடந்த வருடம், இந்த அமைப்புகள் தடை செய்யப்பட்ட போதும் தற்போது, அத்தடை நீக்கப்பட்டுள்ள போதும், ஜெனரல் கமல் குணரத்தனவே பாதுகாப்புச் செயலாளராக இருந்துள்ளார். இது, சில அரசியல்வாதிகள், அரசியலமைப்பின் 17ஆவது, 18ஆவது, 19ஆவது, 20ஆவது திருத்தங்களுக்கு ஆதரவாக வாக்களித்ததை நினைவூட்டுகிறது.

இவ்வனைத்து விடயங்களையும் கருத்திற்கொள்ளும் போது, பலமான காரணங்களுக்காக இவ்வமைப்புகள் தடைசெய்யப்படுகின்றனவா என்ற சந்தேகம் எழுகிறது. கோட்டாபய ராஜபக்‌ஷ இன்றுவரை பதவியில் இருந்தால், இம்முறை இவ்வமைப்புகளின் தடை நீக்கப்பட்டு இருக்குமா?

எனவே, இந்தத் தடையானது, அரசியல் இலாபம் கருதி மேற்கொள்ளப்படும் ஒன்றேயல்லாமல், பாதுகாப்பு காரணங்களுக்கானது அல்ல என்பதை, எடுத்துக் காட்டுகிறது.

2015ஆம் ஆண்டு, எட்டு அமைப்புகள் மீதும் 267 நபர்கள் மீதும் விதிக்கப்பட்டு இருந்த தடையை, மைத்திரி- ரணில் அரசாங்கம் நீக்கிய போது, மஹிந்த ராஜபக்‌ஷவின் ஆதரவாளர்கள், அதனை எதிர்த்துப் பெரும் கூச்சலை எழுப்பினர். ஆனால், இம்முறை தடை நீக்கப்பட்ட போது, அவர்கள் அதைப் பற்றி எதுவும் தெரியாதவர்களைப் போல், மௌனமாக இருக்கிறார்கள். ஏனெனில், அவர்களால் நாடாளுமன்றத்தில் தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியே, இம்முறை இந்த முடிவை எடுத்திருக்கிறார். அன்று, இவர்களது எதிர்ப்பு, வெறும் இனவாதத்தின் காரணமாகவே எழுப்பப்பட்டது என்பதையே இது காட்டுகிறது.

அதேவேளை, தமிழ் தலைவர்களும், நல்லாட்சி அரசாங்கம் இவ்வமைப்புகள் மீதான தடையை நீக்கியதைப் போலல்லாது, வேறுபட்ட நோக்கத்துடனேயே இம்முறை நீக்கியுள்ளதாக கருதுகின்றனர். அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் ஐ.நா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தைக் கருத்தில் கொண்டே, இத்தடை நீக்கம் இடம்பெற்றுள்ளது என்றும் நாடு எதிர்நோக்கி இருக்கும் பெரும் வெளிநாட்டு செலாவணிப் பிரச்சினை காரணமாக, வெளிநாடுகளில் வாழும் தமிழர்களை இலங்கையில் முதலீடு செய்யத் தூண்டும் நோக்கத்திலேயே, தடை நீக்கம் இடம்பெற்றுள்ளது என்றும், அவர்கள் கருத்துத் தெரிவித்திருக்கின்றனர்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அழைப்பின் பேரில் தாம், கடந்த 10 ஆம் திகதி அவரைச் சந்தித்ததாகவும் அப்போது அவர், புலம்பெயர் தமிழர்கள் இலங்கையில் முதலீடு செய்வது தொடர்பான திட்ட ஆவணம் ஒன்றைத் தம்மிடம் சமர்ப்பித்ததாகவும், வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் தமிழ் மக்கள் தேசிய முன்னணியின் தலைவருமான சி.வி விக்னேஸ்வரன் அறிக்கையொன்றில் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்துக்கு, புலம்பெயர் தமிழர்கள் மூலம் முதலீடுகளை வரவழைத்துக் கொள்ளும் தேவை இருக்கலாம். ஆனால், ரணிலைப் பொறுத்தவரை இதுவே இத்தடை நீக்கத்துக்கு ஒரே காரணம் எனக் கூற முடியாது. ஏனெனில், அவரது ஆலோசனையின் பேரிலேயே, 2015ஆம் ஆண்டிலும் தடை நீக்கம் மேற்கொள்ளப்பட்டது. அன்றைய அரசாங்கம் இந்த அமைப்புக்கள் மீதான தடையை நீக்கியது மட்டுமல்லாது, அப்போதைய வெளிநாட்டு அமைச்சர் மங்கள சமரவீர, புலம்பெயர் தமிழர்களின் விழாவை இலங்கையில் நடத்தவும் திட்டமிட்டிருந்தார். தடையை நீக்கியது சரியான நடவடிக்கையாக இருந்தாலும், அரசாங்கத்துக்கு உள்ளேயே எழுந்த எதிர்ப்பின் காரணமாக, மங்கள அந்த யோசனையைக் கைவிட்டார்.

எனினும், இந்த அமைப்புகள் மீதான தடையை நீக்கி, அவற்றின் மூலம் மனித உரிமைகள் பேரவையின் நெருக்குவாரத்தை குறைக்கும் நோக்கம் சிலவேளை, ஜனாதிபதி ரணிலின் மனதில் இருக்கலாம். கடந்த வருடம் செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐ.நா பொதுச் சபையின் 76ஆவது கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நியூயோர்க் நகருக்குச் சென்றிருந்த கோட்டா, செப்டெம்பர் 19ஆம் திகதி, ஐ.நா செயலாளர் நாயகம் அன்டோனியோ குட்டரேஸை சந்தித்தார். அந்தச் சந்திப்பின் போதும், 22ஆம் திகதி பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றும் போதும், தமது அரசாங்கம் புலம்பெயர் தமிழ் அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தத் திட்டமிட்டுள்ளதாகத் தெரிவித்தார். ஆனால், நாடு திரும்பிய சில நாள்களில், அப்போதைய வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல் பீரிஸ், ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையில், “தடைசெய்யப்பட்ட அமைப்புகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதில்லை” என்றார்.

புலம்பெயர் தமிழர்கள், வெளிநாடுகளில் இலட்சக் கணக்கில் வாழ்கின்றனர். அவர்களில் பலர், அந்நாடுகளில் உயர் அந்தஸ்தில் உள்ளனர். பலர், பெரும் செல்வந்தர்களாக உள்ளனர். அவர்கள், இந்நாட்டில் முதலீடு செய்வதால், இலங்கையின் பொருளாதாரத்துக்கு புத்துயிரூட்டலாம். அதேவேளை, இலங்கையில் வடக்கிலும் கிழக்கிலும் வாழும் தமது உறவினர்களின் சிந்தனையிலும், அவர்கள் பெரும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றனர்.

எனவே, அவர்களது அமைப்புகளைத் தடை செய்து, அவர்களை முற்றாகப் புறக்கணிக்க முயல்வது, புத்திசாலித்தனமானது அல்ல. அவர்களை அரவணைத்துச் செல்வதே, நாட்டின் இனமத நல்லிணக்கத்துக்கும் பொருளாதார அபிவிருத்திக்கும் பேருதவியாகவே அமையும்.

ஆனால், அவர்கள் விடயத்தில், அரசாங்கத்தின் கொள்கை, ஆட்சியாளர்கள் மாறும் போதெல்லாம் மாறும் கொள்கையாக இருக்கிறது. இதனால், மேற்குறித்த நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள முடியாதுள்ளது.

வடக்கு, கிழக்கில் முதலீடு செய்வதானது, வெறுமனே அரசாங்கத்துக்கு செய்யும் உதவியல்ல என்பதையும் புலம்பெயர் தமிழர்கள் உணர வேண்டும்.




# அமைச்சரவை தீர்மானங்கள் சில...

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையில், திங்கட்கிழமை (15) நடைபெற்ற வாராந்த அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களில் சில...**

### வழிகாட்டலுக்கு அங்கிகாரம்

இலங்கையில் சிறுவர் அபிவிருத்தி நிலையங்களுக்கான தேசிய வழிகாட்டி மற்றும் குறைந்தபட்ச தரநியமங்களை அறிமுகப்படுத்தல், இலங்கையில் வாழ்கின்ற அநாதை, ஆதரவற்ற, கைவிடப்பட்ட, துஷ்பிரயோகத்திற்கு ஆளாகிய மற்றும் சட்டப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்துள்ள பிள்ளைகளின் பராமரிப்பு, பாதுகாப்பு, உடல் மற்றும் உள ரீதியான நல்விருத்தி போன்றவற்றை உறுதிப் படுத்துவதற்காக, நன்னடத்தை மற்றும் சிறுவர் பாதுகாப்புத் திணைக்களத்தின் கண்காணிப்பின் கீழ், சிறுவர் அபிவிருத்திச் சேவைகள் நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறுவர் அபிவிருத்தி நிலையங்கள் தொடர்பாகத் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டிகள் மற்றும் முதன்மைச் சட்டங்கள், மாகாண மட்டத்தில் தற்போது நடைமுறைப்படுத்தப்பட்டு வந்தாலும், தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வழிகாட்டியொன்று இல்லை.

அதனால், சிறுவர் பாதுகாப்பு தொடர்பான துறைசார்ந்த அனைத்துத் தரப்பினர்களையும் பிரதிநிதித்துவப்படுத்தி, குறித்த நிபுணர்களின் கண்காணிப்பு மற்றும் வழிகாட்டலின் கீழ் தயாரிக்கப்பட்டுள்ள வழிகாட்டலுக்கு அங்கிகாரம்.

### 75 ஆவது சுதந்திரதின விழா

2023ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 04 ஆம் திகதி வருகின்ற 75 ஆவது சுதந்திரதின விழா நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்துவதற்காக மற்றும் வழிநடத்துவதற்காக, அமைச்சரவை உபகுழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்தன, அமைச்சர்களான டக்ளஸ் தேவானந்தா, சுசில் பிரேமஜயந்த, பந்துல குணவர்த்தன, அலி சப்ரி, விதுர விக்கிரமநாயக்க, கஞ்சன விஜேசேகர ஆகியோர் அந்த உபகுழுவில் அடங்குகின்றனர்.

### புரிந்துணர்வு ஒப்பந்தம்

விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புகளுக்காக இலங்கை அரசு மற்றும் நேபாள அரசு ஆகியவற்றுக்கு இடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்ள அங்கிகாரம் வழக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசு மற்றும் நேபாள அரசுக்கிடையில் விஞ்ஞானம், தொழில்நுட்பம், புத்தாக்கம் போன்ற துறைகளில் ஒத்துழைப்புகளுக்கு, புரிந்துணர்வு உடன்படிக்கையை மேற்கொள்வதற்காக முன்பிருந்த திறன் விருத்தி, தொழிற்கல்வி, ஆராய்ச்சி மற்றும் புதிய உற்பத்திகள் இராஜாங்க அமைச்சுக்கு 2021.06.21 ஆம் திகதியன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

எனினும், குறித்த புரிந்துணர்வு உடன்படிக்கை இதுவரை கையொப்பமிடப்படவில்லை. இருதரப்பினர்களுக்கிடையே ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்பாடுகளுக்கமைய, குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### காணியொன்றை ஒதுக்கி வழங்கல்

1,000 இரண்டாம் நிலைப் பாடசாலைகள் மீள்கட்டமைத்தல் வேலைத்திட்டத்தின் கீழ், நாவலப்பிட்டி அல் - ஃஸ்பா ஆரம்ப பாடசாலை 2013ஆம் ஆண்டில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டதுடன், அதற்குத் தேவையான கட்டட வசதிகள், ரயிவே திணைக்களத்திற்குச் சொந்தமான நாவலப்பிட்டி ரயில் நிலையத்திற்குரிய பண்டங்கள் களஞ்சியத்தின் மூலம் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தது.

தற்போது அப்பாடசாலையின் மாணவர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளமையால், குறித்த கட்டடம் போதுமானதாக இன்மையால், நிரந்தரமான கட்டடமொன்றை அமைக்க வேண்டிய தேவை கண்டறியப்பட்டுள்ளது. அதற்கமைய, இலங்கை ரயில்வே திணைக்களத்துக்குச் சொந்தமான நாவலப்பிட்டி கொடமுதுன, கரஹந்துன்கலவில் அமைந்துள்ள 02 ஏக்கர் காணித்துண்டை, பாடசாலைக்காக சட்டபூர்வமாக ஒதுக்கி வழங்குவதற்கு அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### கூட்டாக முத்திரை வெளியிடல்

2022 ஒகஸ்ட் மாதம் 15ஆம் திகதி, இந்தியாவின் 75ஆவது சுதந்திரதின விழாக் கொண்டாட்டத்திற்கு இணையாக, 'ஜனநாயகம்' எனும் தொனிபொருளில் இரண்டு நாடுகளின் 'பாராளுமன்றங்களை' பிரதிபலிக்கின்ற வகையில், எமது நாட்டின் அஞ்சல் திணைக்களம் மற்றும் இந்திய அஞ்சல் திணைக்களத்தால் இரண்டு கொண்டாட்ட முத்திரைகள் வெளியிடுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளது.

அதேபோல், இரண்டு நாடுகளாலும் வெளியிடப்படும் முத்திரைகளில் 3,000 முத்திரைப் பொதிகளும், 5,000 நினைவுப் பத்திரங்களும், 2,000 முதல் நாள் அட்டைகளையும் பரிமாற்றிக் கொள்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய, குறித்த பணிகளுக்காக இரண்டு நாடுகளின் அஞ்சல் திணைக்களங்களுக்கு இடையே புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்கும் அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

### சட்டமூலமொன்றைத் தயாரித்தல்

ஊடகத் துறையில் பணிபுரிகின்ற ஊடகவியலாளர்களின் தொழில்வாண்மையை அதிகரிக்கும் நோக்கில், 'இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர்களின் நிறுவனம்' இனைத் ஸ்தாபிப்பதற்காக 2021.10.05 அன்று இடம்பெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் அங்கிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ள வழிநடாத்தல் குழுவால், குறித்த நிறுவனத்தைத் ஸ்தாபிப்பதற்கு ஏற்புடைய வகையில் தயாரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்தின் அடிப்படையில், சட்ட வரைஞர் திணைக்களத்தின் மூலம் சட்டமூலமொன்றைத் தயாரிப்பதற்கு, இதற்கு முன்னர் முன்மொழியப்பட்டுள்ள 'இலங்கை பட்டயம் பெற்ற ஊடகவியலாளர் நிறுவனம்' எனும் பெயருக்குப் பதிலாக முன்மொழியப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் 'இலங்கை பட்டய ஊடக தொழில்வாண்மையாளர்கள் நிறுவனம்' எனத் திருத்தம் செய்வதற்கான யோசனையை, வெகுசன ஊடக அமைச்சர் சமர்ப்பிப்பதற்கு, அமைச்சரவை அங்கிகாரம் வழங்கியுள்ளது.

மொகாலி

# பாக்.,சீன ஆயுதங்களுடன் ஐ.எஸ்.ஐ தீவிரவாதிகள் கைது

புதுடெல்லியில் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது, பாகிஸ்தானின் ஐ.எஸ்.ஐ ஆதரவு பெற்ற பயங்கரவாத அமைப்புடன் தொடர்புடைய நால்வர் கைது செய்யப்பட்டனர்.

கனடாவை அடிப்படையாக கொண்டு செயற்படும் ஆர்ஷ்தீப் சிங் என்ற 'ஆர்ஷ் தலா', அவுஸ்திரேலியாவை தளமாகக் கொண்டு செயற்படும் 'தாதா' குர்ஜந்த் சிங் என்ற 'ஜந்தா' ஆகியோருடன் அவர்களுக்கு தொடர்பு இருப்பது விசாரணைகளில் தெரியவந்தது.

நீதிமன்ற அனுமதியுடன் ஐந்து நாள்கள் தடுப்புக்காவலில் வைத்து, விசாரணைக்கு உட்படுத்துவதற்கு பொலிஸாருக்கு அனுமதியளிக்கப்பட்டது. அவர்களிடம் பறிமுதல் செய்யப்பட்ட ஆயுதங்கள், பாகிஸ்தான் இராணுவம் பயன்படுத்த கூடியவை எனத் தெரிய வந்துள்ளது

இந்தப் பயங்கரவாதிகளிடம் இருந்து, சீனாவில் தயாரிக்கப்பட்ட கையெறி குண்டுகள், சக்தி வாய்ந்த ஒரு வெடிகுண்டு, இரண்டு கைத்துப்பாக்கிகள், வெடிக்க தயார் நிலையில் உள்ள 40 தோட்டாக்கள் என்பன பறிமுதல் செய்யப்பட்டன.

சுதந்திர தினத்தன்று, புதுடெல்லி மற்றும் பஞ்சாப்பில் குற்ற செயல்களில் ஈடுபட, ஆர்ஷ் தலா உத்தரவிட்டார் என, அவர்கள் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இந்தியா

ஃபோர்ப்ஸ் பட்டியலில்

## இந்தியாவுக்கு 4ஆவது இடம்



ஆசிய-பசிபிக் பிராந்தியத்தில், 'ஃபோர்ப்ஸ் ஆசியா' வெளியிட்ட 2022ஆம் ஆண்டுக்கான 200 சிறந்த நடுத்தர நிறுவனங்களைக் கொண்ட நாடுகளின் பட்டியலில், இந்தியா 24 நிறுவனங்களுடன் நான்காவது இடத்தைப் பிடித்துள்ளது.

2021இல் இந்தப் பட்டியலில் இந்தியா 26 ஆவது இடத்தில் இருந்தது. இந்தியாவுக்கு அடுத்தபடியாக 22 நிறுவனங்களுடன் சீனா ஐந்தாவது இடத்தில் இருந்தது. தாய்வான் அதிகபட்ச அளவாக 30 நிறுவனங்களை உள்ளடக்கி தொடர்ந்து ஒன்பதாவது ஆண்டாக முதலிடத்தை தக்கவைத்துள்ளது.

ஜப்பான் 29 நிறுவனங்களுடன் இரண்டாவது இடத்திலும், தென் கொரியா 27 நிறுவனங்களுடன் மூன்றாவது இடத்திலும் உள்ளன.

இந்தியாவைப் பொறுத்தவரையில், ஆடை தயாரிப்பில் ஈடுபட்டு வரும் நிறுவனங்கள், கொரோனா பாதிப்பிலிருந்து வேகமாக மீண்டு, கடந்த மார்ச் மாதத்துடன் முடிவடைந்த 2021-22ஆம் நிதியாண்டில் 30 சதவீத விற்பனை வளர்ச்சியை பதிவு செய்துள்ளதுடன் அதன் நிகர இலாபம் 72 சதவீதம் அதிகரித்துள்ளது.

மும்பை,

## அம்பானிக்கு மிரட்டல் விடுத்தவர் சிக்கினார்

உலகின் மிகப்பெரும் பணக்காரர்களில் ஒருவரான முகேஷ் அம்பானி, மும்பையில் தனது குடும்பத்துடன் வசித்து வருகிறார். முகேஷ் அம்பானிக்கு அச்சுறுத்தல் இருப்பதால் அவருக்கு பாதுகாப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

இந்தநிலையில், மும்பை கிர்காவ் பகுதியில் உள்ள 'ரிலையன்ஸ்' ஆஸ்பத்திரிக்கு காலை 10.30 மணியளவில் மர்ம நபர் ஒருவர், தொடர்ந்து 3, 4 முறை தொலைபேசி அழைப்பை எடுத்து, தொழில் அதிபர் முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பத்தினரை கொலை செய்துவிடுவேன் என மிரட்டினார்.

இது குறித்து உடனடியாக மும்பை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டது. அவ்வாறு மிரட்டியவரின் செல்போன் எண்ணை வைத்து, அவரை தகிசர் பகுதியில் பொலிஸார் மடக்கிப் பிடித்தனர்.

> **காலை 10.30க்கு மர்ம நபர், தொலைபேசி அழைப்பெடுத்து, முகேஷ் அம்பானி மற்றும் அவரது குடும்பத்தினரை கொலை செய்துவிடுவேன் என மிரட்டினான்**

இது குறித்து பொலிஸ் அதிகாரி கூறுகையில், "தொலைபேசி அழைப்பை எடுத்து மிரட்டிய நபர் மனநலம் பாதிக்கப்பட்டவர் என்பது தெரியவந்து உள்ளது. சம்பவம் தொடர்பாக, பொலிஸார் வழக்குப்பதிவு செய்து விசாரித்து வருகின்றனர்" என்றார்.

கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம், மும்பையில் உள்ள முகேஷ் அம்பானியின் 'அண்டிலா' ஆடம்பர அடுக்குமாடி பங்களா அருகில், வெடிகுண்டு கார் நிறுத்தப்பட்ட சம்பவம் நாடு முழுவதும் பரபரப்பை ஏற்படுத்தியது. அந்த வழக்கில் முக்கிய பொலிஸ் அதிகாரிகள் பலர் கைது செய்யப்பட்டனர்.



சென்னை

## என்னை சந்திக்க வரவேண்டாம்



அண்ணா திராவிட முன்னேற்ற கழக (அ.தி.மு.க) பொதுச்செயலாளர் என்ற பெயரில், சசிகலா வெளியிட்டுள்ள அறிக்கையில், 'எனது பிறந்த நாளன்று, சென்னையில் உள்ள இல்லத்தில் என்னை நேரில் வந்து சந்திக்க விரும்புவதாக தொடர்ந்து கோரிக்கை வருவதை அறிந்து கொண்டேன்.

'உங்களுடைய அன்புக்கு நான் என்றைக்குமே அடிமை. உங்களுடைய அன்பும் ஆதரவும், எனக்கு மிகுந்த மகிழ்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கிறது. அதேசமயத்தில், நான் விரைவில் உங்களையெல்லாம் நேரில் வந்து சந்திக்க, தமிழகத்தின் அனைத்து பகுதிகளுக்கும் வர இருக்கிறேன்.

'நீங்கள் இருக்கும் இடத்திற்கே வந்து உங்களையெல்லாம் நான் காண இருக்கிறேன்; உங்களோடு நேரில் உரையாட இருக்கிறேன். ஆகையால், தற்சமயம் எனது பிறந்த நாளுக்காக, நீங்கள் சிரமப்பட்டு, பயணித்து எனது இல்லம் வருவதை தவிர்த்துவிடுங்கள்' என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

'நீங்கள் இருக்கும் பகுதியிலேயே, உங்கள் கண்முன்னே இருக்கும் ஏழை எளிய மக்களுக்கு, உங்களால் இயன்ற அளவில் நீங்கள் செய்கின்ற உதவிகளையே, எனக்கு நீங்கள் அளிக்கின்ற, சிறந்த பிறந்த நாள் பரிசாக, மனதார ஏற்றுக்கொள்கிறேன்' என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.



சென்னை

## விஜயகாந்தை பார்த்து கண் கலங்கிய தொண்டர்கள்

தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் (தே.மு.தி.க) தலைவர் விஜயகாந்த், நீண்ட நாள்களுக்குப் பிறகு கட்சி அலுவலகத்தில் தொண்டர்களை சந்தித்தார். உடல்நலக் குறைவு காரணமாக, வீட்டில் இருந்து சிகிச்சை பெற்று வருகின்றமையால், கட்சி சார்ந்த நிகழ்ச்சிகள், பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்பதை தவிர்த்து வருகிறார்.

இந்நிலையில், சென்னை, கோயம்பேட்டில் உள்ள தே.மு.தி.க தலைமை அலுவலகத்தில், சுதந்திர தின விழாவில் பங்கேற்பதற்காக விஜயகாந்த், கட்சி அலுவலகம் வந்தார்.

நீண்ட நாள்களுக்குப் பிறகு விஜயகாந்தைப் பார்த்ததும், தொண்டர்கள் உற்சாகம் அடைந்தனர். அலுவலக வாயிலில் அவருக்கு உற்சாக வரவேற்பு அளித்தனர். "கேப்டன்.. கேப்டன்" என்று கோஷமிட்டு, மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர்.

ஒருசிலர் விஜயகாந்த் உடல்நிலையைப் பார்த்து கண் கலங்கினர். தொண்டர்களைப் பார்த்து விஜயகாந்த் மகிழ்ச்சியுடன் கையசைத்தார்.

திருச்செந்தூர்

## அக்காள்-தங்கைகள் 3 பேரை மணந்த பிரான்ஸ் வாலிபர்கள்

நெல்லை மாவட்டம், சுத்தமல்லி பகுதியை பூர்வீகமாக கொண்ட மாசிலாமணி-ஆனந்தி தம்பதியினர், கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக பிரான்ஸ் நாட்டில் வசித்து வருகிறார்கள்.

அங்கு மாசிலாமணி, தனியார் உணவகத்தில் மேலாளராக வேலை பார்த்து வருகிறார். இவர்களுக்கு காயத்ரி, கீர்த்திகா, நாராயணி என 3 மகள்கள் உள்ளனர்.

மூன்று பேரும் பிரான்சில் படித்து, அங்கேயே பணியாற்றி வருகின்றனர். மூவரும் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த வாலிபர்களை காதலித்து வந்துள்ளனர். காதலுக்கு எந்தவித எதிர்ப்பும் தெரிவிக்காமல் மாசிலாமணி குடும்பத்தினர், தமிழ் கலாசார முறைப்படி திருமணம் செய்து வைக்க முடிவு செய்தனர்.

இதையடுத்து திருச்செந்தூர் சுப்பிரமணிய சுவாமி கோவிலுக்கு தனது உறவினர்களுடன் வந்த மாசிலாமணி-ஆனந்தி தம்பதி. தங்களின் 3 மகள்களுக்கும் ஒரே நேரத்தில் பிரான்ஸ் நாட்டை சேர்ந்த ஜோர்ஜ், ராம்குமார், மஜ்ஜூ ஆகிய மூவருக்கும் தமிழ் கலாசார முறைப்படி மாலை மாற்றி திருமணம் செய்து வைத்தனர்.



## டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி க்கு

# நிதியுதவியை வழங்குவதற்கு IFC முன்வந்துள்ளது

இலங்கையில் பரந்த புரோட்பாண்ட் உட்கட்டமைப்பு அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டு டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி க்கு 150 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்குவதற்கு IFC முன்வந்துள்ளது.

கொழும்பு, இலங்கை, 2022 ஜூலை 27, இலங்கையின் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி - டயலொக் (Dialog Axiata PLC ), சர்வதேச நிதிக் கூட்டுத்தாபனத்தின் (IFC) ஆதரவுடன் நாடு முழுவதும் புரோட்பாண்ட் இணைப்பை விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் தயாராக உள்ளது.

மேற்படி IFC இன் 150 மில்லியன் டொலர் கடனுதவியானது , ஏற்கெனவே உள்ள தளங்களை மேம்படுத்துதல் மற்றும் புதிய 4G தளங்களை உருவாக்குவதன் மூலம் டயலொக் அதன் வலையமைப்பு திறனை மேலும் விரிவுபடுத்தவும் மேம்படுத்தவும் அது உதவிகரமாக அமையும். அதற்கமைய , Dialog அதன் 'ஃபைபர் ஆப்டிக் நெட்வொர்க்' தடத்தை (fibre optic network footprint) அதிகரிக்கவும் மற்றும் முக்கிய வலையமைப்பு செயற்பாடுகளில் கொள்திறன்கள் மற்றும் செயற்திறன்கள் இரண்டையும் அதிகரிக்கச்செய்து மேம்படுத்தல்களைச் செயற்படுத்தவும் முயல்கிறது.

இலங்கையில் முன்னணி தொலைத்தொடர்பு சேவை வழங்குனராக டயலொக், நாட்டிலுள்ள மொபைல் மற்றும் நிலையான புரோட்பாண்ட் சந்தையில் 50 சதவீதத்திற்கும் மேலாக பிரதிநிதித்துவப்படுத்துகிறது, அதுமட்டுமன்றி, இலங்கையில் பின்தங்கிய பகுதிகளுக்கு தரமான இணைப்புகளை திறம்பட விரிவுபடுத்துவதற்கும் தயாராக உள்ளது.

32 மில்லியனுக்கும் அதிகமான மொபைல் பாவனையாளர்களைக் கொண்டு, மொபைல் சேவைகளின் பாவனையில் இலங்கை கணிசமான முன்னேற்றத்தை அடைந்துள்ளது, 149 சதவீத மொபைல் பாவனையில், தெற்காசிய நாடுகளில் மாத்திரம் அது சராசரியாக 85 சதவீதமாக உள்ளது. புரோட்பாண்ட் பாவனை மற்றும் அதன் வசதித்தன்மை ஆகியவற்றை உள்ளடக்கிய தரவரிசையில் இலங்கையானது முதல் 20 நாடுகளுள் ஒன்றாக இடம்பிடித்துள்ள அதேவேளை, இணைய தரம் மற்றும் வேகம், பதிவிறக்க வேகம் ஆகியவற்றில் உலகளவில் 125வது இடத்தையே (141 நாடுகளுள்) பெற்றுள்ளதால், இணையத் தரம் மற்றும் வேகம் ஆகியவற்றில் பலவீனமாக உள்ளதையே அது உணர்த்துகின்றது. முக்கியமாக மொபைல் தரவு பயன்பாடு மற்றும் 3G போன்ற பழைய தொழில்நுட்பங்களை அதிகமாக நம்பியிருப்பதன் காரணமாகவே சந்தையில் தரவரிசையில் இந்தக் குறிப்பிடத்தக்க இடைவெளி ஏற்பட்டுள்ளது.

IFC இன் தெற்காசியாவிற்கான பிராந்திய பணிப்பாளர் ஹெக்டர் கோமஸ், இது குறித்து தெரிவிக்கையில், "தரமான மற்றும் நம்பகமான தொலைத்தொடர்பு உட்கட்டமைப்பானது ஒரு நாட்டின் பொருளாதார வளர்ச்சியில் பல மடங்கு விளைவைக் கொண்டிருக்கிறது. சமூகங்களை நெருக்கமாகக் கொண்டுவரும் அதே வேளையில் டிஜிட்டல் பொருளாதாரம், வர்த்தகம் மற்றும் தொழில்முனைவு ஆகியவற்றை இது ஊக்குவிப்பதுடன் வளர்ச்சி மற்றும் வேலைகளுக்கான புதிய மற்றும் புதுமையான வழிகளை திறப்பதற்கு இது வாய்ப்பளிக்கிறது. டயலொக் உடனான இந்தப் பங்காளித்துவத்தில் IFC இன் முதலீடானது, தற்போதைய நிச்சயமற்ற நிலைகளுக்கு மத்தியிலும், இலங்கையின் தனியார் துறையின் வளர்ச்சிக்கு ஆதரவளிப்பதற்கான எங்கள் அர்ப்பணிப்பைக் காட்டுகிறது" என குறிப்பிட்டுள்ளார்.

இந்நிகழ்வில் உரையாற்றிய டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி தலைவர் டேவிட் நை பெக் லாவ், "IFC , ஆசிஆட்டா மற்றும் டயலொக் இடையேயான தொடர்ச்சியான ஒத்துழைப்பானது மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கின்றது. கடந்த பல வருடங்களாக டயலொக் மற்றும் இலங்கை மீது IFC கொண்டுள்ள நம்பிக்கைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். மேலும் நமது நோக்கிற்கேற்ப நாட்டின் தொலைத்தொடர்பு இணைப்பு உட்கட்டமைப்பை முன்னேற்றுவதற்கான எங்கள் பயணத்தில் நாம் தற்போது எதிர்கொள்ளும் பாரிய சவால்களை எதிர்கொள்வதற்கு உதவிகரமாக உள்ள அவர்களின் இந்த உறுதியான ஆதரவிற்காக நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கின்றோம். இலங்கையரின் வாழ்க்கைமுறை மற்றும் தொழில்முனைவு நிறுவனங்களையும் வளப்படுத்தி செழிக்கச்செய்வதில் இது முக்கிய பங்காற்றுகின்றது. இந்தச் சவாலான காலங்களில் IFC இன் இந்த நிதியுதவி இலங்கையின் எதிர்கால டிஜிட்டல் இணைப்புத் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் முக்கிய பங்கினை வகிக்கும்" என்றார்.

முன்னணி பிராந்திய தொலைத்தொடர்பு சேவை வழங்குனரான Axiata Group Berhad இன் ஒரு பகுதியான Dialog, IFCயின் நீண்டகால வாடிக்கையாளராக இருந்து வருகின்றது. 2004 மற்றும் 2007 ஆம் ஆண்டுகளில் முந்தைய கடன் மற்றும் பங்கு முதலீடுகள் தவிர, இலங்கையிலுள்ள டயலொக் விநியோகஸ்தர்களின் வணிகத் திறன்களை வலுப்படுத்தவும், நாட்டின் கிராமப்புற மற்றும் பின்தங்கிய பகுதிகளைச் சேர்ந்த 3,000க்கும் மேற்பட்ட சிறு வணிக உரிமையாளர்களுக்கு பயனளிக்கவும் IFC உதவியது. மேலும் ஆசிஆட்டா குழுமம், பங்களாதேஷ் உட்பட ஆசியாவில் IFC க்கு முக்கிய பங்குதாரராக இருந்து வருகின்றது, IFC ஆனது செயற்பாட்டிலுள்ள சந்தைகளில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் டிஜிட்டல் பொருளாதாரத்தின் வளர்ச்சியை ஊக்குவித்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி பணிப்பாளர் / குழும பிரதம நிறைவேற்று அதிகாரி அதிகாரி சுபுன் வீரசிங்ஹ கருத்து தெரிவிக்கையில், "IFC உடனான டயலொக்கின் இந்தத் தொடர்பு 2004 ஆம் ஆண்டு முதல் தொடர்கின்றது. மேலும் ஒரு தேசமாக டயலொக் மற்றும் இலங்கை மீது அவர்கள் தொடர்ந்து வைத்திருக்கும் நம்பிக்கைக்கு நாங்கள் நன்றியுள்ளவர்களாக இருக்கிறோம். இன்று, நாம் ஒரு நாடாகவும் ஒரு நிறுவனமாகவும், ஒரு முக்கியமான கட்டத்தில் இருக்கிறோம். IFC மற்றும் ஆசிஆட்டாவின் இந்த இணைவின் மூலம், நாட்டில் அடுத்த கட்ட தொலைத்தொடர்பு இணைப்பு உட்கட்டமைப்பு மேம்படுத்தலை ஆரம்பிக்கவும், தடையில்லா சேவைகள் மற்றும் உலகத்தரம் வாய்ந்த தொழில்நுட்பத்தை அனைத்து இலங்கையர்களுக்கும் சிறு நிறுவனங்களுக்கும் வழங்குவதற்கான எமது அர்ப்பணிப்பைத் தொடரக்கூடியதாகவும் அமையும்" என்றார்.

2050ஆம் ஆண்டளவில், பசுமைமிகு தொடர்புகளை பின்தொடர்வதற்கும், உலகளாவிய காலநிலை நடவடிக்கை இலக்குகளை ஆதரிப்பதற்கும் மற்றும் நிகர பூஜ்ஜிய CO2 உமிழ்வை அடைவதற்கும் டயலொக் மேற்கொள்கின்ற முயற்சிகளுக்கு அமைய, அதற்கான மொபைல் ஃபோன் இணைப்புகளுக்கான IFC செயற்றிறன் தரநிலைகளுக்கு ஏற்ப மேம்படுத்தப்பட்ட சுற்றுச்சூழல் மற்றும் சமூக முகாமைத்துவ கட்டமைப்பினூடேயான உறுதிகளை IFC வழங்கும்.

"இணைப்பை வலுப்படுத்துவது மற்றும் வளர்ச்சியை விரைவுபடுத்துவது இலங்கைக்கு முன்னெப்போதையும் விட இப்போது மிகவும் முக்கியமானதாகும். இந்தச் சமீபத்திய முதலீட்டின் மூலம், IFC -Dialog Axiata synergy, நாடு முழுவதும் உள்ள மக்கள் மற்றும் வணிகங்களுக்கான இணைப்பின் தரத்தை மேம்படுத்துவதற்கான கூட்டுறவில் மற்றொரு குறிப்பிடத்தக்க மைல்கல்லைக் குறிக்கிறது" என IFC இன் ஆசியா மற்றும் பசுபிக் உட்கட்டமைப்புக்கான பிராந்திய தொழில் பணிப்பாளர் இசபெல் சாட்டர்டன் தெரிவித்தார். "தொழில்நுட்பத்தின் ஆற்றலைத் தொடர்ந்து பயன்படுத்துவதன் மூலம் புதுமைகளை உருவாக்கவும் மேலும் இலங்கையர்களுக்கு சிறந்த வாய்ப்புகளை உருவாக்கவும் உதவும்" எனவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

இந்தத் துறை வேகமாக வளர்ந்து, தொழில்நுட்ப ரீதியாக முன்னேறி வருவதால், வளர்ந்து வரும் சந்தைகளில் டிஜிட்டல் உட்கட்டமைப்பில் முன்னணி மேம்பாட்டு நிதியளிப்பாளர்களில் ஒன்றாக IFC தொடர்வதுடன் , சுற்றுச்சூழல் அமைப்பின் அனைத்து அம்சங்களையும் அது ஆதரிக்கின்றது. அதற்கமைய கடந்த தசாப்தத்தில், டிஜிட்டல் உட்கட்டமைப்பு மற்றும் சேவைகளில் 6.5 பில்லியன் டொலருக்கு அதிகமாகவும், கடந்த இரண்டு ஆண்டுகளில் மட்டும் 2 பில்லியன் டொலருக்கு அதிகமாகவும் நிதிப்பங்களிப்பை IFC வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. டிஜிட்டல் உட்கட்டமைப்பை மேம்படுத்துவதற்கும் செயற்படுத்துவதற்கும் மேலதிகமாக, IFC அதன் சேவை நிறுவனங்களுக்கு அவர்களின் சுற்றுச்சூழல் மற்றும் சமூக நடைமுறைகளை IFC இன் செயற்றிறன் தரநிலைகளுக்கேற்ப சீரமைக்க உதவுகிறது.

டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும சட்ட மற்றும் ஒழுங்குமுறை பிரிவின் குழும பொது

## IFC பற்றி

உலக வங்கி குழுமத்தின் உறுப்பினரான IFC ஆனது வளர்ந்து வரும் வர்த்தக சந்தைகளில் தனியார் துறைமீது கவனத்தை செலுத்திவருகின்ற மிகப்பெரிய உலகளாவிய மேம்பாட்டு- அபிவிருத்தி நிறுவனமாகும். வளரும் நாடுகளில் சந்தைகள் மற்றும் வாய்ப்புகளை உருவாக்க எங்கள் மூலதனம், நிபுணத்துவம் மற்றும் செல்வாக்கைப் பயன்படுத்தி 100க்கும் மேற்பட்ட நாடுகளில் நாங்கள் தொழிற்பட்டு வருகின்றோம் . 2021 நிதியாண்டில், வளரும் நாடுகளில் உள்ள தனியார் நிறுவனங்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு 31.5 பில்லியன் டொலர்களை செலுத்தி IFC சாதனை படைத்துள்ளது, கொவிட் -19 பெருந்தொற்று தாக்கத்தின் காரணமாக பொருளாதார தாக்கங்கள் மற்றும் கடுமையான வறுமையை முடிவுக்குக் கொண்டுவருவதற்காக , பகிரப்பட்ட உதவிகளை அதிகரிக்கவும் தனியார் துறையின் சக்தியை மேம்படுத்துவதிலும் இதன் பங்களிப்பு முக்கியத்துவத்தை பெற்றுள்ளது. மேலதிக விபரங்களுக்கு wifc.org க்கு செல்லுங்கள்.

## டயலொக் பற்றி

ஆசிஆட்டா குழும பேர்ஹாட் (ஆசிஆட்டா) Axiata Group Berhad (Axiata) இன் துணை நிறுவனமான டயலொக் ஆசிஆட்டா குழுமம் இலங்கையின் முன்னணி Quad-Play இணைப்பு வழங்குனரை செயற்படுத்துகின்றது. கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ள டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, இலங்கையின் நிலையான தொலைத்தொடர்புகள், டிஜிட்டல் கட்டண தொலைக்காட்சி, டிஜிட்டல் சேவைகள் , நிதிச் சேவைகள் மற்றும் தகவல் தொழில்நுட்பச் சேவைகள் சந்தைகளில் வலுவான தடம் மற்றும் சந்தை இருப்புடன் மொபைல் தொலைத்தொடர்புத் துறையில் தனது சந்தை முன்னணி நிலையை நிரப்புகிறது. மற்றும் இதன் துணை நிறுவனங்களான, Dialog Broadband Networks (Private) Limited (DBN), Dialog Television (Private) Limited (DTV), Digital Holdings Lanka (Private) Limited, Dialog Finance PLC, மற்றும் H One (Private) Limited ஆகியனவும் இதில் அங்கத்துவம் வகிக்கின்றன. டயலொக் ஆசிஆட்டா குழுமமானது இலங்கையின் மிகப்பெரிய வெளிநாட்டு நேரடி முதலீட்டை (Foreign Direct Investor -FDI) கொண்டதாகும் மொத்த முதலீடுகள் 3 பில்லியன் அமெரிக்க டொலர்களாகும்.

90 களின் பிற்பகுதியில் இருந்து இலங்கையில் மொபைல் துறையில் புதுமை மற்றும் டிஜிட்டல் மயமாக்கலில் டயலொக் முன்னணியில் உள்ளது, இது நாட்டின் மொபைல் தொலைபேசி உட்கட்டமைப்பை வளர்ந்த நாடுகளுக்கு இணையான முன்னேற்றத்திற்கு கொண்டு சென்றுள்ளது. 2.5G, 3G/3.5G மற்றும் 4G/4.5G வலையமைப்புகள் மூலம் 17 மில்லியனுக்கும் அதிகமான இலங்கையர்களுக்கு மேம்பட்ட மொபைல் தொலைபேசி மற்றும் அதிவேக மொபைல் புரோட்பாண்ட் சேவைகளை டயலொக் வழங்குகின்றது, மேலும் 2018 டிசம்பரில் தெற்காசியாவில் டயலொக் முதற் தடவையாக 5G முன்னோடி ஒளிபரப்பை காட்சிப்படுத்தியது.

ஆறு குளோபல் மொபைல் விருதுகளை வென்ற டயலொக், இலங்கை நுகர்வோரின் வாக்களிப்பில் பதினோராவது ஆண்டாக 'தொலைத்தொடர்பு வர்த்தக நாமம் ' என்ற பெருமையை பெற்றுள்ளது. அத்துடன் தொடர்ச்சியாக மூன்றாவது வருடமாக 'ஆண்டின் சிறந்த சேவைகளுக்கான வர்த்தக நாமம்' SLIM-KANTAR 2022 மக்கள் விருதையும் பெற்றுள்ளது. மேலும், பிராண்ட் ஃபைனான்ஸ் லீக் அட்டவணையில் தொடர்ந்து நான்காவது ஆண்டாக 'இலங்கையின் மிக மதிப்புமிக்க வர்த்தக நாமம்' மற்றும் தொடர்ந்து பதினைந்தாவது ஆண்டாக 'மிகவும் பெறுமதிமிக்க தொலைத்தொடர்பு வர்த்தக நாமம்' என்ற விருதையும் டயலொக் நிறுவனம் பெற்றுள்ளது. டயலொக் என்பது ISO 9001 தரச்சான்றிதழ் பெற்ற நிறுவனமாகும். இது அதன் தகவல் பாதுகாப்பு முகாமைத்துவ அமைப்புக்கும் 27001:2013 தரநிலையுடன் சான்றளிக்கப்பட்டுள்ளது. நிறுவனத்தின் சுற்றுச்சூழல் முகாமைத்துவ அமைப்பும் அதன் முழு அளவிலான செயல்பாடுகளுக்காக ISO 14001:2015 தரநிலையைப் பெற்றுள்ளதுடன் அதன் முழு அளவிலான செயற்பாடுகளுக்கான தர நிலைக்கான விருதையும் பெற்றுள்ளதுடன் இது தெற்காசியாவில் அவ்வாறு அமையப்பெற்ற முதல் Quad-play என்பதும் குறிப்பிடத்தக்கது. இவைமட்டுமன்றி, டயலொக் உள்நாட்டு மற்றும் சர்வதேச விருதுகள் உட்பட தேசிய தர சிறப்பு விருது மற்றும் இலங்கை வர்த்தக சிறப்பு விருது என இன்னும் பல விருதுகளையும் பெற்றுள்ளது. மேலதிக விவரங்களுக்கு www.dialog.lk க்கு செல்லுங்கள்.

**தொடர்பில் இருங்கள்:**

IFC
**www. facebook.com/IFCwbg**
**www.twitter.com/IFC_org**
**www.youtube.com/IFCvideocasts**
**www.instagram.com\ifc_org**
**www.ifc.org/southasia**
**www.facebook.com/IFCsouthasia**
**www.twitter.com/IFC_SouthAsia**
**www.linkedin.com/company/ifc-south-asia**
**www.ifc.org/tmt**
**www.ifc.org/infrastructure**

Dialog Axiata PLC
**www.facebook.com/dialog.lk**
**www.instagram.com/dialoglk/**
**www.youtube.com/c/dialoglk**
**www.twitter.com/dialoglk**
**www.lk.linkedin.com/company/dialog-axiata-plc**
**www.tiktok.com/@dialoglk**
**www.dialog.lk**




ஆலோசகர்/துணைத் தலைவர் றினேஷ் பெர்னாண்டோ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைமை நிதி அதிகாரி வொங் ஹொங் சுயூ, IFC யின் இலங்கை மற்றும் மாலைத்தீவு ஆகிய நாடுகளுக்கான அதிகாரி – விக்டர் அன்டனிப்பிள்ளை, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும பணிப்பாளர்/குழும பிரதம நிறைவேற்று அதிகாரி சுபுன் வீரசிங்ஹ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் குழும தலைவர் டேவிட் நை பெக் லூ, டயலொக் ஆசிஆட்டா பிஎல்சியின் பெருநிறுவன நிதி தலைவர் அஹமட் ரிஸா.

இங்கிலாந்து பிறீமியர் லீக்:

# சமநிலையில் லிவர்பூல் பலஸ் போட்டி



இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான பிறீமியர் லீக் தொடரில், லிவர்பூலின் மைதானத்தில் நடைபெற்ற அவ்வணிக்கும், கிறிஸ்டல் பலஸுக்கும் இடையிலான போட்டியானது 1-1 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை லூயிஸ் டயஸ் பெற்றதோடு, கிறிஸ்டல் பலஸ் சார்பாகப் பெறப்பட்ட கோலை வில்ஃபிரைட் ஸாகா பெற்றிருந்தார்.

இப்போட்டியில் எதிரணி வீரரைத் தலையால் முட்டியதற்காக லிவர்பூலின் டர்வின் நுனேஸுக்கு சிவப்பு அட்டை காண்பிக்கப்பட்டு களத்திலிருந்து வெளியேற்றப்பட்டிருந்தார்.



மர்ஹூம் ஏ.எம். றசீன் ஞாபகார்த்த சிநேகபூர்வ கிரிக்கெட் தொடர்:

# சம்பியனான 93/96 பவர் பிளேயர்ஸ்

■ எஸ். அஷ்ரப்கான்

கல்முனை சாஹிரா தேசிய பாடசாலை மைதானத்தில் 94/97 சுப்பர் ஹீரோஸ் அணியினரால் ஏற்பாடு செய்யப்பட்டு நடைபெற்ற மர்ஹூம் ஏ.எம்.றசீன் (விளையாட்டு உத்தியோகத்தர்) ஞாபகார்த்த சிநேகபூர்வ கிரிக்கெட் தொடரில் 93/96 பவர் பிளேயர்ஸ் அணி சம்பியனானது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் 94/97 சுப்பர் ஹீரோஸ் அணி வென்றதுடன், இரண்டாவது போட்டியில் 93/96 பவர் பிளேயர்ஸ் அணி வென்றிருந்த நிலையில், தீர்க்கமான மூன்றாவது போட்டியில் வென்றே 93/96 பவர் பிளேயர்ஸ் சம்பியனாகியிருந்தது.

இத்தொடரின் நாயகனாக 94/97 சுப்பர் ஹீரோஸ் அணியின் பாஹிம் தெரிவானார்.

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக்:

# றோயலை முந்திய சென். ஜோசப்

டயலொக் பாடசாலைகள் றக்பி லீக் தொடரில் புள்ளிகள் பட்டியலில் றோயல் கல்லூரியை சென். ஜோசப் கல்லூரி முந்தியது.

ஹவ்லொக்கில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற வெஸ்லி கல்லூரியுடனான போட்டியை 26-11 என்ற புள்ளிகள் கணக்கில் சென். ஜோசப் வென்றமையைத் தொடர்ந்தே புள்ளிகள் பட்டியலில் றோயலை முந்தியது.

சென். ஜோசப் சார்பாக, ஜெஹான் அத்துகோரள, சாமோத் செனவிரத்ன, நவீன் மாரசிங்க, சஷிந்தன வைத்யநாத ஆகியோர் தலா ஒவ்வொரு ட்ரையைப் பெற்றதோடு, டில்ஹார சுபாஷ் மூன்று கொன்வேர்ஷன்களை பூர்த்தி செய்திருந்தார்.

வெஸ்லி சார்பாக, அகீஷ் ஜெயமன்ன ஒரு ட்ரையைப் பெற்றதோடு, ஜெயவர்தன இரண்டு பெனால்டிகளுக்கான புள்ளிகளைப் பெற்றிருந்தார்.

Dialog SCHOOLS RUGBY

35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான சிநேகபூர்வ கால்பந்தாட்டம்:

# லிவர்பூலை வென்ற புத்தளம் லெஜன்ட்ஸ்





■ எம்.யூ.எம். சனூண்

புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் அண்மையில் நடைபெற்ற லிவர்பூல் கால்பந்தாட்டக் கழகத்துடனான 35 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான போட்டியில் 2-1 என்ற கோல் கணக்கில் புத்தளம் லெஜன்ட்ஸ் கால்பந்தாட்டக் கழகம் வென்றது.

இளமைக் காலத்தில் தத்தமது கழகங்களுக்கு விளையாடியவர்கள் ஒட்டுமொத்தமாக லெஜன்ட்ஸ் அணியிலும், லிவர்பூல் கழகத்தின் முன்னாள் முன்னணி வீரர்கள் லிவர்பூல் அணியிலும் இடம்பெற்றிருந்தனர்.

# யுனைட்டெட் செல்லும் வார்டி?



இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான லெய்செஸ்டர் சிற்றியின் முன்களவீரரான ஜேமி வார்டியை கைச்சாத்திடுவது குறித்து இன்னொரு பிறீமியர் லீக் கழகமான மன்செஸ்டர் யுனைட்டெட் கருத்திற் கொள்வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எவ்வாறாயினும், 35 வயதான வார்டியை வெளியேற அனுமதிப்பதில் லெய்செஸ்டர் தயக்கம் காட்டுவதாகக் கூறப்படுகிறது.

தாய்வான்

# தாய்வானைச் சுற்றி சீனா மீண்டும் போர்ப்பயிற்சி



சீனாவிடம் இருந்து பிரிந்து தனிநாடாக உருவெடுத்த தாய்வானுக்கு அமெரிக்கா பல்வேறு வழிகளில் உதவி செய்து வருகிறது.

இது, தாய்வானை தங்கள் நாட்டின் ஒரு பகுதி சொந்தம் கொண்டாடி வரும் சீனாவுக்கு ஆத்திரத்தை ஏற்படுத்தி வருகிறது.

இந்த சூழலில் சீனா கடும் எதிர்ப்பை புறம் தள்ளிவிட்டு அமெரிக்க சபாநாயகர் நான்சிபெலோசி கடந்த 2ஆம் திகதி தாய்வான் சென்றார்.

இதில் ஆத்திரமடைந்த சீனா, தாய்வானை நாலாபுறமும் சுற்றிவளைத்து கடல் மற்றும் வான்வெளியில் போர்ப்பயிற்சியில் ஈடுபட்டது.

இதனால் தாய்வான் சீனா இடையே போர் பதற்றம் உச்சத்தை எட்டிய நிலையில் கடந்த 11ஆம் திகதி சீனா பயிற்சியை நிறைவு செய்தது.

இந் நிலையில் இந்த பதற்றத்துக்கு மத்தியில் அமெரிக்க நாடாளுமன்ற உறுப்பினர்கள் 5 பேரைக் கொண்ட பிரதிநிதிகள் குழுவொன்று அண்மையில் தாய்வானுக்குச் சென்று அந்நாட்டு ஜனாதிபதி சாய் இங் வென்னை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்தியுள்ளமை சீனாவுக்கு மேலும் கோபத்தை ஏற்படுத்தியுள்ளது.

இதனால் சீன இராணுவம் தாய்வானைச் சுற்றி மீண்டும் போர்ப்பயிற்சியை தொடங்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது உலக நாடுகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஆப்கானிஸ்தான்

ஆப்கானிஸ்தானில் கனமழை

# 31 பேர் உயிரழப்பு

ஆப்கானிஸ்தானின் கிழக்கு பகுதியில் உள்ள பர்வான் மாகாணத்தில் கடந்த சில நாட்களாகக் கடுமையான மழைபெய்து வருகின்றது.


இந்நிலையில் இக்கனமழையினால் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் சிக்கி ஏராளமான வாகனங்கள் அடித்துச் செல்லப்பட்டுள்ளதோடு, ஆயிரத்துக்கும் அதிகமான வீடுகள் மற்றும் வீதிகள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் இதுவரை வெள்ளத்தில் சிக்கி 31 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் 100-க்கும் அதிகமானோர் மாயமாகி உள்ளனர் எனவும் இதனால் உயிரிழப்புக்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



அவுஸ்திரேலியா

# காதலனைப்பழிவாங்க இப்படியா செய்வது?




அவுஸ்திரேலியாவில் தன்னை ஏமாற்றிய காதலனைப் பழிவாங்க பெண்ணொருவர் செய்த காரியம் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.


அவுஸ்திரேலியாவின் குயின்ஸ்லாந்து பகுதியைச் சேர்ந்தவர் ஜென்னி. இவர் தனது காதலனை விமர்சித்து அவமானப்படுத்தும் விதமாக அந்நாட்டில் வெளியாகும் மெக்கே அன்ட் விட்சன்டே லைப் (Mackay and Whitsunday Life) என்ற செய்தித்தாளில் அண்மையில் ஒரு முழு பக்க விளம்பரமொன்றை கொடுத்துள்ளார்.

குறித்த விளம்பரத்தில் "டியர் ஸ்டீவ், நீ அவளுடன் சந்தோஷமாக இருப்பாய் என நினைக்கிறேன். இப்போது இந்த முழு நகரமே நீ எவ்வளவு மோசமான ஏமாற்றுக்காரன் என்ற உண்மை அறிந்து கொள்ளும். இப்படிக்கு ஜென்னி. பின்குறிப்பு, இந்த விளம்பரத்தை உனது கிரெடிட் கார்டை பயன்படுத்தித் தான் வெளியிட்டுள்ளேன்". இவ்வாறு ஜென்னி தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் குறித்த பதிவுக்கு 6,500க்கும் மேற்பட்ட லைக்குகளும், 2,000க்கும் அதிகமான ஷேர்களும், 3,000க்கும் அதிகமான கமெண்டுகளும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பூனை

# இப்படியும் ஒரு பூனையா?



ரஷ்யாவைச் சேர்ந்த யூலியா மினினா என்னும் பெண் தன்னுடைய வீட்டில் பழமையானப் பூனை இனங்களில் ஒன்றான மைனே கூன்ஸ் எனப்படும் (Maine Coons) இனத்தைச் சேர்ந்த பூனையொன்றை வளர்த்து வருகின்றார்.

உலகின் மிகப்பெரிய பூனை என நம்பப்படும் இப் பூனைக்கு கெஃபிர் எனப் பெயர்சூட்டியுள்ள மினினா அப் பூனையின் புகைப்படங்களை தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் அவர் அவ்வப்போது பதிவிட்டு வருகின்றார்.

இதனாலேயே ஆயிரக்கணக்கான மக்கள் அவரை பின்தொடர்ந்து வருகின்றனர் .மேலும் 'இப் பூனையானது சராசரியாக 2 வயது சிறுவனின் உயரம் கொண்டதாகவும் பார்ப்பதற்கு அச்சமூட்டும் வகையில் இருந்தாலும் இது மிகவும் பாசமான பூனை என மினினா தெரிவித்துள்ளார்.

மடகஸ்கார்

# இந்திய சைக்கிளில் வலம் வந்த மடகாஸ்கர் பிரதமர்

இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு இந்தியாவின் நட்பு நாடான மடகாஸ்கருக்கு 15,000 சைக்கிள்களை இந்தியா வழங்கியுள்ளது.

இந்நிலையில் இரு நாடுகளுக்கும் இடையே வளர்ந்து வரும் நட்பு மற்றும் ஒற்றுமையை வெளிப்படுத்தும் விதமாக மடகாஸ்கர் மற்றும் கொமொரோஸ் நாட்டின் இந்திய தூதர் அபய் குமார் மற்றும் மடகாஸ்கர் பிரதமர் கிறிஸ்டியன் என்ட்சே ஆகியோர் ஒன்றாக இந்த சைக்கிள்களை ஓட்டியுள்ளனர்.

இது குறித்த வீடியோவினை மடகாஸ்கர் மற்றும் கொமோரோஸ் நாட்டுக்கான இந்திய தூதரகம் தனது டுவிட்டர் பக்கத்தில் பகிர்ந்துள்ளது.

குறித்த வீடியோவானது இணையத்தில் வைரலாகி வருகின்றது.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை 17 ஒகஸ்ட் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது